# ஈரோடு மாநகராட்சி

## மாமன்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்

## (திருவள்ளுவராண்டு 2042 ஐப்பசித் திங்கள் 14-ஆம் நாள்)

2012-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 30–ஆம் தேதி (30.10.2012) செவ்வாய்க் கிழமை காலை 11.00 மணிக்கு மாமன்ற கூட்ட அரங்கில் நடைபெற்ற மாமன்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்.

\- - -

## கூட்ட நடவடிக்கைகள்

**1)** ஈரோடு மாநகராட்சி 25.10.2011 முதல் 4 மூன்றாம் நிலை நகராட்சிகள், 2 பேரூராட்சிகள், 5 ஊராட்சிகள் ஆகியவற்றுடன் இணைக்கப்பட்டு 60 வார்டுகள் 4 மண்டலங்களாக செயல்பட்டு வருகிறது. தற்போது ஈரோடு மாநகராட்சியில் பல்வேறு வளர்ச்சி பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஈரோடு மாநகராட்சியில் மாநகரப் பொறியாளர் பணியிடம் 24.03.2012 முதல் காலியாக உள்ளது.

தமிழ்நாடு மாநகராட்சி பொறியியல் மற்றும் குடிநீர் பணி விதிகள் 1996–ன்படி மாநகரப் பொறியாளர் பணியிடமானது கீழ்கண்டவாறு வகைப்படுத்தப்பட்டுள்ளது.

வகுப்பு – I

வகை – I

இனம் – I

மாநகரப் பொறியாளர் பணியிடத்தை மாநகராட்சி பணிவிதிகளின்படி பதவி உயர்வு மூலம் அல்லது அயற்பணி மூலம் நிரப்பலாம்.

ஈரோடு மாநகராட்சியில் தற்போது இரண்டு செயற் பொறியாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள்.

1. திரு. ஆர். சதாசிவம், செயற் பொறியாளர் (திட்டம்)
2. திரு. கே. ஆறுமுகம், செயற் பொறியாளர் (பணிகள்)

மேற்படி இருவரும் மாநகராட்சி பணி விதிகளின்படி பதவி உயர்வுக்கு தகுதி பெறவில்லை. எனவே ஒருங்கிணைக்கப்பட்ட ஈரோடு மாநகராட்சியில் பொறியியல் மற்றும் குடிநீர் பிரிவின் அத்தியாவசியப் பணிகள் பாதிக்கப்படாதவாறு காலியாக உள்ள மாநகரப் பொறியாளர் பணியிடத்தை அயற்பணியில் பூர்த்தி செய்து வழங்க நகராட்சி நிர்வாக ஆணையர் வழியாக அரசுக்கு கருத்துரு அனுப்ப மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

ஒருங்கிணைக்கப்பட்ட ஈரோடு மாநகராட்சியின் வளர்ச்சி பணிகள் பாதிக்கப்படாதவாறு உடனுக்குடன் நடவடிக்கை மேற்கொள்ள ஏதுவாக காலியாக உள்ள மாநகரப் பொறியாளர் பணியிடத்தை அயற்பணியில் பூர்த்தி செய்ய நகராட்சி நிர்வாக ஆணையர் வழியாக அரசுக்கு கருத்துரு அனுப்ப மாமன்றம் அனுமதிக்கலாம்.

சி1/725/12

**186. இம்மாநகராட்சியில் பணிபுரியும் பணியாளர்களில் மாநகரப் பொறியாளர் பதவி உயர்வுக்கு தகுதியானவர்களுக்கு பதவி உயர்வு வழங்கலாம் எனவும், அயற்பணி மூலம் மாநகரப் பொறியாளர் பணியிடத்தை பூர்த்தி செய்ய வேண்டாம் எனவும் தீர்மானித்து இப்பொருள் ரத்து செய்யப்படுகிறது.**

**2.** ஈரோடு மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.44-ல் அமைந்துள்ள மாநகராட்சிக்கு சொந்தமான உயர்கல்வி மற்றும் பொது நூலக கட்டிடத்தின் தரைத்தளத்தில் மாநகராட்சியில் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு தமிழ் மற்றும் ஆங்கில தினசரி பத்திரிக்கைகள் மற்றும் வார, மாதாந்திர இதழ்கள் பயன்பாட்டில் உள்ளது.

தற்போது மாவட்ட ஆணைக்குழுவின் கீழ் இயங்கி வரும் ஈரோடு கிளை நூலகம் பழுதடைந்த கட்டிடத்தில் இயங்கி வருகிறது எனவும் அக்கட்டிடம் எந்த நேரத்திலும் இடிந்து விடும் சூழ்நிலையில் உள்ளது என மாவட்ட நூலக அலுவலர்(பொ), ஈரோடு அவர்களின் ந.க.எண்.881/அ3/2012 நாள் 20.07.12 கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் ஈரோடு நுகர்வோர் அமைப்பு மாவட்ட ஆட்சியர் கூட்ட அரங்கில் 12.01.12 அன்று நடைபெற்ற கூட்டத்தில் பெரியார் நகர் நூலகத்தில் செய்திதாள்கள் மட்டுமே உள்ளன. புத்தகங்கள் இல்லை. அதனால் நூலகரும் நியமிக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே ஈரோடு நகர வாசகர்கள், படித்து வரும் மாணவ, மாணவியர்கள் மற்றும் நூல் வாசிப்பவர்களின் நலனை கருத்தில் கொண்டு இயங்கி வரும் பெரியார் நகர் நூலக கட்டிடத்தை ஈரோடு மாவட்ட நூலகத்திற்கு இலவசமாக வழங்குமாறு மாவட்ட நூலக அலுவலர்(பொ), ஈரோடு அவர்களின் ந.க.எண்.881/அ3/2012 நாள் 20.07.12 கடிதத்தில் கேட்டுள்ளார்கள்.

எனவே மேற்படி நூல் வாசிப்பவர்கள் நலனை கருத்தில் கொண்டு தற்போது காலியாக இருந்து வரும் பெரியார் நகர் மாநகராட்சி நூலக கட்டிடத்தில் முதல் தளத்தை வாடகை அடிப்படையில் வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

அலுவலகக் குறிப்பு-

மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

அ1/2432/12

**187. வார்டு எண்.44ல் அமைந்துள்ள மாநகராட்சிக்கு சொந்தமான உயர்கல்வி மற்றும் பொது நூலக கட்டிடத்தின் முதல் தளத்தை ஈரோடு நகர நூல் வாசிப்பாளர்களின் நலனை கருத்தில் கொண்டும் ஈரோடு மாவட்ட நூலகத்திற்கு இலவசமாக இடம் வழங்க தீர்மானிக்கப்பட்டது. மேலும் தணிக்கையில் ஆட்சேபனை எழும் பட்சத்தில் ஒப்படைக்கும் தேதி முதல் மாநகராட்சியால் நிர்ணயம் செய்யும் வாடகையை செலுத்த வேண்டும் என்ற நிபந்தனைக்கு உட்பட்டும் அனுமதி வழங்க தீர்மானிக்கப்பட்டது.**

**3. 10.** இம்மாநகராட்சி பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவிகளில் முதல் கட்டமாக கருங்கல்பாளையம் காவேரி ரோடு பெண்கள் மேநிலைப்பள்ளியில் பயிலும் 193 பேருக்கு ஆங்கிலப் பேச்சாற்றல் அளித்தல் பணிக்கு இம்மாமன்றம் தனது 30.07.12ம் தேதிய தீர்மானம் எண்.167-ல் உத்தேச செலவினம் ரூ.70,000/-க்கு அனுமதி வழங்கியுள்ளது. அதற்படி மேற்படி பணிக்கு 17.08.12ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் பின்வருமாறு-

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | ஒரு மாணவருக்கு கட்டணம் ரூ. |
|---|---|---|
| 1. | சி.எஸ்.சி கம்ப்யூட்டர் எடிகேசன் | 345- |
| 2. | காம்பிரிட்ஜ் ஸ்போக்கன் அண்டு ஸ்கில்ஸ் டெவலப்மென்ட் அகாடமி | 349- |

இரு நிறுவனத்தாரும் ஒப்பந்தப்புள்ளி வைப்புத் தொகையினை மாநகராட்சிக் கருவூலத்தில் செலுத்தியுள்ளனர். வந்துள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

அலுவலகக் குறிப்பு-

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக ரூ.345/-க்கு (ஒரு மாணவருக்கு) கொடுத்துள்ள மெசர்ஸ் சி.எஸ்.சி கம்ப்யூட்டர் எடிகேசன், ஈரோடு நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளி உள்ளூர் சந்தை நிலவரத்திற்கு ஏற்புடையதாக இருப்பதால் அதனை மாமன்றம் ஏற்கலாம்.

இ1/3933/12

**188. ஒத்தி வைக்கப்பட்டது.**

**4.** ஈரோடு மாநகராட்சி மண்டலம்-3 எல்லைக்குட்பட்ட செங்கோடம்பாளையம் பகுதியில் அமைந்துள்ள உயர்நிலைப் பள்ளியில் மேற்குபுறம் கிழக்கு பார்த்த 43' x 27' அளவுள்ள ஓட்டுவில்லை பள்ளிகட்டிடம் மிகவும் பழுதடைந்து மேற்கூரைகள் பெயர்ந்தும் சுவர்களில் விரிசல்கள் அடைந்தும் பள்ளி குழந்தைகளுக்கு ஆபத்து விளைவிக்க கூடிய நிலையில் உள்ளது. மேற்படி கட்டிடத்தை தொழில்நுட்ப ரீதியாக ஆய்வு செய்யப்பட்டதில்

கட்டிடத்தினை சீரமைப்பு செய்து உபயோகப்படுத்த இயலாத நிலையில் உள்ளதால் மேற்படி கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்த அவசியமாகிறது. எனவே பழுதடைந்த பள்ளி கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்த மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

அனுமதி வழங்கலாம்.

**இ1/3093/12**

**189. அனுமதி வழங்கப்பட்டது.**

**5.** ஈரோடு மாநகராட்சி மண்டலம்-3 எல்லைக்குட்பட்ட திண்டல் பகுதியில் அமைந்துள்ள உயர்நிலைப்பள்ளியில் மேற்குபுறம் கிழக்கு பார்த்த 63' x 22' அளவுள்ள ஓட்டுவில்லை பள்ளிகட்டிடம் மிகவும் பழுதடைந்து மேற்கூரைகள் பெயர்ந்தும் சுவர்களில் விரிசல்கள் அடைந்தும் பள்ளி குழந்தைகளுக்கு ஆபத்து விளைவிக்க கூடிய நிலையில் உள்ளது. மேற்படி கட்டிடத்தை தொழில்நுட்ப ரீதியாக ஆய்வு செய்யப்பட்டதில் கட்டிடத்தினை சீரமைப்பு செய்து உபயோகப்படுத்த இயலாத நிலையில் உள்ளதால் மேற்படி கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்த அவசியமாகிறது. எனவே பழுதடைந்த பள்ளி கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்த மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

அனுமதி வழங்கலாம்.

**இ1/3092/12**

**190. அனுமதி வழங்கப்பட்டது.**

**6.** ஈரோடு மாநகராட்சி மண்டலம்-2க்குட்பட்ட பகுதியில் பூங்கா அமைக்கவும், மேம்படுத்தவும் நகர் ஊரமைப்பு துறை பூங்கா அபிவிருத்தி நிதியிலிருந்து மேற்கொள்ள நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களுக்கு முன்மொழிவுகள் அனுப்புமாறு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 10594/2012/டிபி3 நாள் 04.05.2012ல் தெரிவிக்கப்பட்டது. அதன்பேரில் இம்மாநகராட்சி வார்டு எண்.22 சம்பத் நகர் மெயின் சாலையில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்திற்கும் ஐ.எம்.ஏ ஹாலுக்கும் அருகில் மாநகராட்சிக்கு சொந்தமான பூங்கா இடத்தில் புதியதாக பூங்கா அமைப்பதற்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.18.00 லட்சத்திற்கு முன்மொழிவுகள் அனுப்பவும், அரசு நிதி ஒதுக்கீட்டிற்கு மேல் ஆகும் கூடுதல் செலவினத்தை மாநகராட்சி நிதியிலிருந்து மேற்கொள்ளவும், மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. அரசு நிதி ஒதுக்கீட்டிற்கு மிகும் தொகையினை மாநகராட்சி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

**இ1/1738/12**

**191. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**7.** ஈரோடு மாநகராட்சி மண்டலம்-3, திண்டல் புதுக்காலனி, காரப்பாறை பகுதியில் உள்ள ஓடையின் உட்புறம் அதிகப்படியான மண் நிரம்பியும், புல் மற்றும் முட்செடிகள் வளர்ந்து உள்ள காரணத்தால் மழைக்காலங்களில் ஓடை நீரோட்டம் தடைப்பட்டு அருகில் உள்ள குடியிருப்புகளில் உட்புகுந்து சேதம் விளைவிக்க கூடியதாகயுள்ளதை தொடர்ந்து அதனை அப்புறப்படுத்த இம்மாநகராட்சி வெண்டிபாளையம் குப்பை கிடங்கில் உள்ள மண் அள்ளும் இயந்திரத்தை (Hi-tachi) உபயோகப்படுத்திக் கொள்ள ஏதுவாக மேற்படி இயந்திரத்தை லாரி மூலம் வெண்டிபாளையத்திலிருந்து புதுக்காலனிக்கு கொண்டு செல்லும் பணி முடிந்த பிறகு புதுக்காலனியிலிருந்து வெண்டிபாளையம் குப்பை கிடங்கில் இறக்கி கொடுக்க ஆகும் உத்தேச போக்குவரத்து கட்டணம் ரூ.11,000/-க்கு மாநகராட்சி சட்டம் பிரிவு-15ன் கீழ் 27/07/2012 தேதியில் அனுமதி பெற்று உள்ளூர் விலைப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு பெறப்பட்டது.

| | | |
|---|---|---|
| 1. ஓம் சக்தி எர்த்மூவர்ஸ் அண்டு டிப்பர்ஸ், ஈரோடு | - | ரூ. 12,000/- |
| 2. ஸ்ரீ லட்சுமி எர்த் மூவர்ஸ் அண்டு டிப்பர்ஸ், ஈரோடு | - | ரூ. 10,500/- |
| 3. ஸ்ரீ நடராஜா எர்த் மூவர்ஸ் அண்டு டிப்பர்ஸ், ஈரோடு | - | ரூ. 11,500/- |

பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி ரூ.10,500/- கொடுத்திருந்த "ஸ்ரீலட்சுமி எர்த் மூவர்ஸ் அண்டு டிப்பர்ஸ்", ஈரோடு அவர்கள் விலைப்புள்ளியை ஏற்று, வேலை உத்திரவு வழங்கி பணி முடித்து பட்டியல் தொகை வழங்கியதையும் மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**இ1/2520/12**

**192. பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

**8.** ஈரோடு மாநகராட்சி பெரியசேமூர் கிராமம் ரீ.ச.எண்.175(1) மற்றும் 175(3)ல் உள்ள நிலவியல் வண்டிப்பாதை வழியாக பூமி வாட்டத்தின் அடிப்படையில் பாதாள சாக்கடை குழாய்கள் கொண்டு செல்ல வேண்டியுள்ளது. மேற்படி பூமி தங்களுடைய பட்டா பூமி என்றும் அவ்விடத்தில் குழாய்கள் பதிப்பதை ஆட்சேபித்து திரு. கே. மோகன்ராஜ், திரு. கே. ரவிக்குமார், திரு. பி.டி. சசிக்குமார் என்பவர்கள் மாநகராட்சி ஆணையர் மற்றும் செயற்பொறியாளர் (திட்டம்) அவர்களின் மீது W.P. No. 23033/2012 எண்ணின் வழக்கில் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார்கள். மேற்படி வழக்கினை மாநகராட்சி நிலை வழக்கறிஞர் திரு. எம். ராஜா மதிவாணன் அவர்கள் ஏற்று நடத்தவும், அதற்குண்டான செலவினை ஏற்கவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

அவசர அவசியம் கருதி சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கை நடத்தவும், அதற்குண்டாகும் செலவினத்தினை ஏற்பதற்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்றதிற்கு ஏற்பளிப்பு செய்யலாம்.

**இ3/4505/12**

**193. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**9.** ஈரோடு மாநகராட்சி மண்டலம்-1ற்குட்பட்ட வார்டு எண்.3ல் உள்ள மாதேஸ்வரன் நகர் பகுதியில் சுமார் 150 குடியிருப்புகள் உள்ளன. இப்பகுதி மலைப்பாங்கான பகுதியாகும். இங்கு போதுமான அளவு சாலை வசதி இல்லாத காரணத்தால் அப்பகுதியில் பொதுமக்கள் தற்போது பயன்படுத்தி வரும் மண் சாலை சிறுபாறைகள் கொண்ட கரடுமுரடான பாதைகளாக உள்ளது. இதனால் அடிக்கடி சிறு விபத்துகள் ஏற்பட்டு அப்பகுதி பொதுமக்கள் மிகுந்த சிரமத்திற்குள்ளாகிறார்கள். எனவே பொதுமக்கள் நலன் கருதி மேற்படி பகுதியில் கான்கிரீட் சாலை அமைக்க தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.15.00 லட்சத்திற்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

அனுமதிக்கலாம்.

**இ1/4525/12**

**194. அனுமதி வழங்கப்பட்டது.**

**10.** ஈரோடு மாநகராட்சி மண்டலம்-3 பி.பெ. அக்ரஹாரம் தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து சுத்திகரிக்கப்பட்ட காவேரி ஆற்று குடிநீர் பம்பிங் செய்யப்பட்டு சூரம்பட்டி நீருந்து நிலையத்தில் உள்ள தரைமட்ட தொட்டிக்கு விடப்பட்டு 25 எச்.பி. திறன் கொண்ட நீர் மூழ்கி மின்மோட்டார் மூலம் பழையபாளையத்தில் உள்ள 4.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலைத் தொட்டிக்கு பம்பிங் செய்யப்பட்டு பழையபாளையம், இந்திராகாந்தி வீதி, ஜெய் நகர், சுத்தானந்தன் நகர், அன்னை நகர், அம்பிகை நகர், பெருந்துறை மெயின் ரோடு ஆகிய பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. எனவே மேற்படி பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வந்த 25 எச்.பி. நீர்மூழ்கி மின்மோட்டார் பழுதடைந்து இயக்க முடியாமல் குடிநீர் விநியோகம் தடைப்பட்டது. மேற்படி மின்மோட்டாரை பிரித்து பார்க்கும் போது காயில் ரீவைண்டிங் பம்பு சர்வீஸ் மற்றும் இம்பிள்ளர் புதியதாக மாற்றியமைக்க வேண்டியதன் அவசர அவசியம் கருதி மாநகராட்சிகள் சட்டம் பிரிவு-15ன் கீழ் அனுமதியுடன் 10.07.2012ல் உள்ளூர் விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அதன் விபரம் வருமாறு:-

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | மொத்த செலவினம் |
|---|---|---|
| 1. | திரு. ஏ. செல்வராஜ், ஈரோடு | ரூ. 37,925/- |
| 2. | எம். ஜோதி, ஈரோடு | ரூ. 41,890/- |
| 3. | ஹரீஷ் இன்ஜினியரிங், ஈரோடு | ரூ. 39,880/- |

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவாக விலைப்புள்ளி ரூ.37,925/-க்கு கொடுத்துள்ள திரு. ஏ. செல்வராஜ், ஈரோடு அவர்களின் விலைப்புள்ளி உள்ளூர் சந்தை நிலவரத்திற்கு ஏற்புடையதாக இருந்ததால் மேற்படி விலைப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்கப்பட்டு 25 எச்.பி நீர்மூழ்கி மின்மோட்டார் பழுது சரி செய்யப்பட்டு பின்னர் பட்டியல் தொகை வழங்கப்பட்டது. குடிநீர் விநியோகப் பணிகளின் அவசர அவசியம் கருதி மேற்கண்ட மின்மோட்டார் பழுதுகளை மாநகராட்சிகள் சட்டம் பிரிவு-15ன் கீழ் சரி செய்துள்ள விபரம் மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**இ1/2207/12**

**195. பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

**11.** ஈரோடு மாநகராட்சி மண்டலம்-3 பி.பெ. அக்ரஹாரம் தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து சுத்திகரிக்கப்பட்ட காவேரி ஆற்று குடிநீர் பம்பிங் செய்யப்பட்டு சூரம்பட்டி நீருந்து நிலையத்தில் உள்ள தரை மட்ட தொட்டிக்கு விடப்பட்டு 25 எச்.பி. திறன் கொண்ட நீர் மூழ்கி மின்மோட்டார் மூலம் அணைக்கட்டில் உள்ள 4.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலைத் தொட்டிக்கு பம்பிங் செய்யப்பட்டு அணைக்கட்டு, எம்.எஸ்.கே.நகர், சாஸ்திரி சாலை ராஜாஜி வீதி, நேதாஜி வீதி ஆகிய பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. எனவே மேற்படி பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வந்த 25 எச்.பி நீர்மூழ்கி மின்மோட்டார் பழுதடைந்து இயக்க முடியாமல் குடிநீர் விநியோகம் தடைப்பட்டது. மேற்படி மின்மோட்டாரை பிரித்து பார்க்கும் போது காயில் ரீவைண்டிங் பம்பு சர்வீஸ் மற்றும் ரோட்டர், பம்பு டூம், இம்பிள்ளர் புதியதாக மாற்றியமைக்க வேண்டியதன் அவசர அவசியம் கருதி மாநகராட்சிகள் சட்டம் பிரிவு 15-ன் கீழ் அனுமதியுடன் 06.07.2012ல் உள்ளூர் விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அதன் விபரம் வருமாறு:-

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | மொத்த செலவினம் |
|---|---|---|
| 1. | திரு. ஏ. செல்வராஜ், ஈரோடு | ரூ. 47,650/- |
| 2. | எம். ஜோதி, ஈரோடு | ரூ. 52,620/- |
| 3. | ஹரீஷ் இன்ஜினியரிங், ஈரோடு | ரூ. 50,100/- |

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவாக விலைப்புள்ளி ரூ.47,650/-க்கு கொடுத்துள்ள திரு. ஏ. செல்வராஜ், ஈரோடு அவர்களின் விலைப்புள்ளி உள்ளூர் சந்தை நிலவரத்திற்கு ஏற்புடையதாக இருந்ததால் மேற்படி விலைப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்கப்பட்டு 25 எச்.பி நீர் மூழ்கி மின்மோட்டார் பழுது சரி செய்யப்பட்டு பின்னர் பட்டியல் தொகை வழங்கப்பட்டது. குடிநீர் விநியோகப் பணிகளின் அவசர அவசியம் கருதி மேற்கண்ட மின்மோட்டார் பழுதுகளை மாநகராட்சிகள் சட்டம் பிரிவு 15ன் கீழ் சரி செய்துள்ள விபரம் மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**இ1/2680/12**

**196.. பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

**12.** ஈரோடு மாநகராட்சி மண்டலம்-3 பி.பெ. அக்ரஹாரம் தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து சுத்திகரிக்கப்பட்ட காவேரி ஆற்று குடிநீர் பம்பிங் செய்யப்பட்டு சூரம்பட்டி நீருந்து நிலையத்தில் உள்ள தரைமட்ட தொட்டிக்கு விடப்பட்டு 25 எச்.பி திறன் கொண்ட நீர் மூழ்கி மின்மோட்டார் மூலம் பழையபாளையத்தில் உள்ள 4.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலைத் தொட்டிக்கு பம்பிங் செய்யப்பட்டு பழைய பாளையம், இந்திராகாந்தி வீதி, ஜெய்நகர், சுத்தானந்தன் நகர், அன்னை நகர், அம்பிகை நகர், பெருந்துறை

மெயின்ரோடு ஆகிய பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. எனவே மேற்படி பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வந்த 25 எச்.பி நீர்மூழ்கி மின்மோட்டார் பழுதடைந்து இயக்க முடியாமல் குடிநீர் விநியோகம் தடைபட்டது. மேற்படி மின்மோட்டாரை பிரித்து பார்க்கும் போது காயில் ரீவைண்டிங் பம்பு சர்வீஸ் மற்றும் இம்பிள்ளர் புதியதாக மாற்றியமைக்க வேண்டியதன் அவசர அவசியம் கருதி மாநகராட்சிகள் சட்டம் பிரிவு-15ன் கீழ் அனுமதியுடன் 10.07.2012ல் உள்ளூர் விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அதன் விபரம் வருமாறு:-

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | மொத்த செலவினம் |
|---|---|---|
| 1. | திரு. ஏ. செல்வராஜ், ஈரோடு | ரூ. 37,925/- |
| 2. | எம். ஜோதி, ஈரோடு | ரூ. 41,890/- |
| 3. | ஹரீஷ் இன்ஜினியரிங், ஈரோடு | ரூ. 39,880/- |

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவாக விலைப்புள்ளி ரூ.37,925/-க்கு கொடுத்துள்ள திரு. ஏ. செல்வராஜ், ஈரோடு அவர்களின் விலைப்புள்ளி உள்ளூர் சந்தை நிலவரத்திற்கு ஏற்புடையதாக இருந்ததால் மேற்படி விலைப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்கப்பட்டு 25 எச்.பி நீர்மூழ்கி மின்மோட்டார் பழுது சரி செய்யப்பட்டு பின்னர் பட்டியல் தொகை வழங்கப்பட்டது. குடிநீர் விநியோகப் பணிகளின் அவசர அவசியம் கருதி மேற்கண்ட மின்மோட்டார் பழுதுகளை மாநகராட்சிகள் சட்டம் பிரிவு-15ன் கீழ் சரி செய்துள்ள விபரம் மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**இ1/2679/12**

**197. இப்பொருள் இரண்டு முறை வரப்பெற்றுள்ளதால் இப்பொருள் எண்.12ஐ ரத்து செய்ய தீர்மானிக்கப்பட்டது.**

**13.** ஈரோடு மாநகராட்சி மண்டலம்-3க்குட்பட்ட வார்டு எண்.39 மோகன்குமாரமங்கலம் சாலை 2நெ. பஸ் நிறுத்தம் அருகில் உள்ள ஆழ்துளை குழாய் கிணற்றில் 6 ஹெச்.பி நீர்மூழ்கி மின் மோட்டாரை அகற்றி புதிய 7.50 ஹெச்.பி நீர்மூழ்கி மின்மோட்டார் அமைத்து கூடுதலாக 2 இன்ச் யூ பி.வி.சி குழாய் மற்றும் கேபிள் நீட்டிப்பு செய்ய வேண்டியதன் அவசர அவசியம் கருதி மாநகராட்சிகள் சட்டம் பிரிவு 15-ன் கீழ் அனுமதியுடன் உள்ளூர் விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அதன் விபரம் வருமாறு:-

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | மொத்த செலவினம் |
|---|---|---|
| 1. | திரு. வி. தாமோதரன், ஈரோடு | ரூ. 99,875/- |
| 2. | திரு. ஏ. முனியப்பன், ஈரோடு | ரூ. 1,00,075/- |
| 3. | திரு. பி. தங்கராஜ், ஈரோடு | ரூ. 1,01,275/- |

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவாக விலைப்புள்ளி ரூ.99,875/-க்கு கொடுத்துள்ள திரு. வி. தாமோதரன், ஈரோடு அவர்களின் விலைப்புள்ளி உள்ளூர் சந்தை நிலவரத்திற்கு ஏற்புடையதாக இருந்ததால் அதனை ஏற்று பணி உத்திரவு வழங்கப்பட்டு பழுதுகளை சரி செய்யப்பட்டு பின்னர் பட்டியல் தொகை வழங்கப்பட்டது. குடிநீர் விநியோகப் பணிகளின் அவசர அவசியம் கருதி மேற்கண்ட பழுதுகளை மாநகராட்சிகள் சட்டம் பிரிவு-15ன் கீழ் சரி செய்துள்ள விபரம் மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

அலுவலகக் குறிப்பு-

மாமன்றம் பதிவு செய்யலாம்.

**இ1/1221/12**

**198. பதிவு செய்யப்பட்டது.**

**14.** கோயமுத்தூர் மாநகராட்சி இராமநாதபுரம் நகர்நல மையத்தில் நகர சுகாதார செவிலியராகப் பணிபுரிந்து வரும் திருமதி. கே. சந்திரிகா என்பவர் தனது 7 வயதில் ஒரு ஆண் குழந்தையும், 2 வயதில் ஒரு பெண் குழந்தையும் உள்ளதாகவும் தனது கணவர் குழந்தைகள் மற்றும் மாமனார் மாமியாருடன் ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சியில் வசித்து வருவதாகவும், கோவையில் தனியாக தங்கி பணிபுரிந்து வருவதால் மிகவும் சிரமப்படுவதாகவும் தெரிவித்து குடும்ப சூழ்நிலை காரணமாக ஈரோடு மாநகராட்சிக்கு ஒருவழி பணிமாறுதலில் வர அனுமதிக்குமாறு கோரியுள்ளார்.

ஆணையாளர், கோவை மாநகராட்சி அவர்களின் கடிதம் ந.க.எண். 6799/12/எம்சி3 நாள் 03.08.12ல் திருமதி. கே. சந்திரிகா, நகர சுகாதார செவிலியரை, கோவை மாநகராட்சியிலிருந்து ஈரோடு மாநகராட்சிக்கு ஒருவழி மாறுதலில் செல்ல கோவை மாநகராட்சி மாமன்றம் அனுமதி வழங்கியுள்ள தீர்மான நகலை மேல் நடவடிக்கைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

தற்போது ஈரோடு மாநகராட்சியில் 16 நகர சுகாதார செவிலியர் பணியிடங்கள் காலியாக உள்ளது. எனவே திருமதி. கே. சந்திரிகா, நகர சுகாதார செவிலியர் என்பவரை ஈரோடு மாநகராட்சிக்கு ஒருவழி மாறுதலில் வர அனுமதிப்பதற்கு மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

மருத்துவ பிரிவு பணியின் அவசியம் கருதி காலியாக உள்ள பணியிடத்திற்கு ஒருவழி மாறுதலில் வர அனுமதிக்கலாம்.

**சி1/4221/12**

**199. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**15.** ஈரோடு மாநகராட்சி நேதாஜி சாலையில் உள்ள ஆயுர்வேத மருந்தகத்தில் பெண் உதவி செவிலியராகப் பணிபுரிந்து வரும் திருமதி. ப. ரேவதி என்பவர் 17.03.08 முதல் வேலைவாய்ப்பகத்தின் மூலம் ஈரோடு மாநகராட்சியில் பணியமர்த்தப்பட்டு பணிபுரிந்து வருவதாகவும் தனது கணவர் சென்னையில் உள்ள தனியார் நிறுவனத்தில் எலக்ட்ரீசியனாகப் பணிபுரிந்து வருவதாகவும், மாமனார் இருதய நோயாளி என்றும் மாமியார் சர்க்கரை நோயால் பாதிக்கப்பட்டுள்ளார் என்றும், திருமதி. ரேவதி என்பவரும் அவரது 6ம் வகுப்பு படிக்கும் மகனும் ஈரோட்டில் தனியாக தங்கி பணிபுரிந்து வருவதாகவும் தெரிவித்துள்ளார். எனவே தனது குடும்ப சூழ்நிலையை கருதி ஈரோடு மாநகராட்சியிலிருந்து சென்னை மாநகராட்சிக்கு பணி மாறுதலில் செல்ல ஆவண செய்யுமாறு கோரியுள்ளார். எனவே அன்னாரை பணிமாறுதலில் செல்ல அனுமதிக்க மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

குடும்ப சூழ்நிலையை கருதில் கொண்டு பணி மாறுதல் சென்னை மாநகராட்சிக்கு செல்ல அனுமதிக்கலாம்.

**சி1/4836/12**

**200. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**16.** ஈரோடு மாநகர பொதுமக்களின் குறைகளை உடனுக்குடன் நிவர்த்தி செய்யும் வகையில் இம்மாமன்ற உறுப்பினர்களுக்கு அலுவலக உபயோகத்திற்காக மாநகராட்சி அலுவலர்களிடம் உடனுக்குடன் தொடர்பு கொள்ளும் பொருட்டு சிம் கார்டுகள் வழங்கிட மாமன்ற தீர்மான எண். 118 நாள் 30.07.12-ல் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

அதன்படி தற்போது மாநகராட்சி பயன்பாட்டில் உள்ள பி.எஸ்.என்.எல் குழும திட்ட செல்போன்களுடன் தொடர்பு கொள்ளும் பொருட்டு மாமன்ற உறுப்பினர்களுக்கும் பி.எஸ்.என்.எல் நிறுவன குழும திட்ட செல்போன் சிம்கார்டுகள் கீழ்கண்ட திட்டத்தின் கீழ் வாங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| Plan - | 199+ Tax 10.5% | - | ரூ. 220- |
| கூடுதல் கட்டணம் | | - | ரூ. 50- |
| மாதமொன்றுக்கு ஒரு இணைப்பிற்கு | | - | ரூ. 270- |

மேற்கண்ட திட்டத்தின் கீழ் பி.எஸ்.என்.எல் நிறுவன குழுமதிட்ட சிம்கார்டுகள் அனைத்து மாமன்ற உறுப்பினர்களுக்கும் வழங்கவும் அதற்கான மாதாந்திரக் கட்டணத்தை தொடர்ந்து செலுத்தவும் மற்றும் இது தொடர்பாக செலுத்த வேண்டிய முன்வைப்புத் தொகைகளை செலுத்தவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியத்தைக் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேல் நடவடிக்கை தொடர்ந்தமைக்கும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**இ2/977/12**

**201. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**17.** ஈரோடு மாநகராட்சி IHSDP திட்டத்தின் கீழ் ஒருங்கிணைந்த குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 454 பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இதில் மண்டலம்-4ல் பணி உத்திரவு பெற்ற 12 நபர்கள் நீண்ட நாட்களாக கட்டிடப் பணியை முடிக்காமல் உள்ளனர். மாநகராட்சி சார்பாக நேரில் சென்று அறிவுறுத்தியும் கட்டிடப் பணியை முடிக்கவில்லை. எனவே பணியின் அவசர அவசியம் கருதி மேற்கண்ட 12 நபர்கள் நபர்கள் (செங்குட்டுவன் வீதி-9, கள்ளியங்காடு-3) பெற்ற பணி உத்தரவை இரத்து செய்து, மாற்றுப் பயனாளிகள் 12 நபர்களை தேர்வு செய்யவும் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று மாமன்றப் பொருள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி திட்டப் பணியாக இருப்பதால் பணியின் அவசர அவசியம் கருதி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு இரத்து செய்யப்பட்டதற்கும், மாற்றுப் பயனாளிகள் தேர்விற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**இ3/379/12**

**202. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**18.** ஈரோடு மாநகராட்சியில் பிளம்பர் உரிமம் கேட்டு திரு. கே. ராமசாமி என்பவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி W.P.24816 of 2012 வழக்கினை ஈரோடு மாநகராட்சி சார்பில் திரு. எம். ராஜாமதிவாணன் வழக்கறிஞர், சென்னை உயர்நீதி மன்றம் அவர்கள் மூலம் ஏற்று நடத்துவதற்கும், மேற்படி வழக்கு கட்டணத்தினை மாநகராட்சி மூலம் செலுத்துவதற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

மாமன்றம் அனுமதிக்கலாம்.

**இ2/325/12**

**203. அனுமதி வழங்கப்பட்டது.**

**19.** இம்மாநகராட்சிக்குக் சொந்தமான நேதாஜி சாலையில் கட்டப்பட்டுள்ள புதிய வணிக வளாகத்தில் காலியாக உள்ள கடைகளுக்கு கடந்த 30.08.2012 அன்று மறுபொது ஏலம் நடைபெற்றது. இவற்றில் கீழ்கண்டுள்ள கடைகளுக்கு மாநகராட்சி மதிப்பை விட கூடுதல் தொகைக்கு உச்சக்கேள்வி கோரியுள்ள ஏலதாரர்கள் மற்றும் உச்சகேள்வி தொகைகள் விபரம் கீழ்கண்டுள்ளவாறு மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | கடை எண். | உச்சகேள்விதாரர் பெயர் | உச்சக்கேள்வி தொகை ரூ. | மாநகராட்சி மதிப்பு ரூ. |
|---|---|---|---|---|
| 1. | 18 | திரு. வி. குமரேசன் | 6400- | 6253- |
| 2. | 41 | திரு. ஏ. பூபதி | 10700- | 10680- |

மேற்காணும் கடைகளுக்கு பல ஆண்டுகளாக ஏலம் விடப்பட்டு வருகின்றது. இந்நிலையில் மேற்காணும் ஏலத்தில் கேட்கப்பட்டுள்ள கேள்வித் தொகையானது மாநகராட்சி நிர்ணயம் செய்யப்பட்டுள்ள மதிப்பிற்கு கூடுதலாக உள்ளது. எனவே மேற்படி ஏல

கேள்விதாரர்களின் உச்சக்கேள்வி மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

1. மாமன்றம் உச்சக்கேள்வி தொகையை ஏற்பது குறித்து முடிவு செய்யலாம்.

அ1/4834/06

**204. கடை எண்.18, 41 ஆகியவைகளுக்கு திரு. வி. குமரேசன் மற்றும் திரு. ஏ. பூபதி ஆகியோர் கோரியுள்ள உச்ச கேள்வித் தொகையை ஏற்றுக் கொள்ள தீர்மானிக்கப்பட்டது. 54ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி. ஜா.சபுராமாமின்ஹாஜ் ஆட்சேபனை செய்தார்.**

**20.** இம்மாநகராட்சி மண்டலம்-2ன் எல்லைக்குட்பட்ட சம்பத்நகர் சாலையில் SJSRY திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள மூன்று கடைகளுக்கு சுயஉதவிக்குழுக்கள் மட்டுமே கலந்து கொள்ளும் வகையில் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 05.09.2012 அன்று நடைபெற்றது. மேற்படி ஏல நடவடிக்கையில் கீழ்கண்டுள்ள சுயஉதவிக்குழுக்கள் கலந்து கொண்டு உச்சக்கேள்வி கோரியுள்ளனர். அதன் விபரம் பின்வருமாறு மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| கடை எண். | சுயஉதவிக்குழுக்கள் விபரம் | உச்சக்கேள்வி தொகை ரூ. |
|---|---|---|
| 1. | ஜெய்சக்தி சிக்கன மற்றும் நாணயச் சங்கம், முனியப்பன் கோவில் வீதி, ஈரோடு | 6300- |
| 2. | வெண்டிபாளையம் டான்வஸ் பண்ணை மகளிர் குழு, வெண்டிபாளையம், ஈரோடு | 7000- |
| 3. | மின்னல் மகளிர் சுய உதவிக்குழு, செல்வம் நகர், கலெக்டர் ஆபீஸ் அஞ்சல், வீரப்பன் சத்திரம், ஈரோடு | 6600- |

மேற்காணும் கடைகளுக்கு சுயஉதவிக்குழுக்கள் கோரியுள்ள உச்சக்கேள்வியை ஏற்பது குறித்து மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

மாமன்றம் முடிவு செய்யலாம்.

அ1/16080/07

**205. கடை எண்.1,2,3க்கு உச்சகேள்வித் தொகை கோரியுள்ள அந்தந்த சுயஉதவிக் குழுக்களுக்கு கடையை ஒதுக்கீடு செய்து கொடுக்க தீர்மானிக்கப்பட்டது.ள**

**21.** ஈரோடு மாநகராட்சி மண்டலம்-1ல் உள்ள பவானி பிரதான சாலையில் கிருஸ்துஜோதி பள்ளி எதிர்புறம் மழை காலங்களில் மழைநீர் சாலையோரம் தேங்கி மிகவும் சேறும் சகதியுமாக துர்நாற்றம் வீசுகிறது. இப்பகுதியில் வடிகால் ஏதும் இல்லை. இதனால் பள்ளி மாணவர்கள் சாலையை கடக்கும் போது சேற்றில் விழுகின்றனர். எனவே பள்ளி மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் நலன் கருதியம், மழை காலங்களில் சுகாதாரத்தை கருத்தில் கொண்டும் மேற்படி பணியினை செய்து கொடுக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.12.50 லட்சத்திற்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

1. அனுமதி வழங்கலாம்.
2. திருத்திய வரவு செலவு திட்டத்தில் இப்பணியை சேர்த்துக் கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

இ1/4969/12

**206. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**22.** ஈரோடு மாநகராட்சி மண்டலம்-1ல் வார்டு எண்.6 பழனியப்பா நகர் பகுதியில் வடிகால் ஏதும் இல்லை. வடிகால் வசதி இல்லாததால் கழிவுநீர் சாலையில் தேங்கி, சுகாதாரம் இன்றியும், போக்குவரத்திற்கு இடையூராகவும் உள்ளது. எனவே சுகாதாரத்தை கருத்தில் கொண்டும், பொது மக்கள் நலன் கருதியும் மேற்படி பகுதியில் வடிகால் வசதி செய்து கொடுக்க தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.16.50 லட்சத்திற்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

1. அனுமதி வழங்கலாம்.
2. திருத்திய வரவு செலவு திட்டத்தில் இப்பணியை சேர்த்துக் கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

**இ1/4970/12**

**207. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**23.** ஈரோடு மாநகராட்சியில் பயன்பாட்டில் உள்ள தெருவிளக்குகளை பராமரிப்பதற்கு தேவைப்படும் மின்உதிரி பொருட்களை ரூ.30.00 இலட்சம் உத்தேச செலவில் வாங்கி பயன்படுத்த மாமன்ற தீர்மானம் எண்.58 நாள் 21.12.2011ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து ரூ. 24.90 இலட்சம் மதிப்பீட்டில் உதிரி பொருட்களை வாங்க 07.02.2012, 04.05.2012 மற்றும் 20.07.2012 தேதிகளில் ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு உதிரிபொருட்கள் பெறப்பட்டன. தற்போது தேவைப்படும் சோடியம் மற்றும் மெட்டல் ஹலாய்டு தெருவிளக்கு உதிரிபொருட்களை ரூ. 4.90 இலட்சம் மதிப்பீட்டில் வாங்க 30.08.2012 தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரி பெறப்பட்ட விபரம் பின்வருமாறு-

1. M/s Reliant Global Green Energy & Co., Coimbatore
2. M/s Roopa General Suppliers, Erode.
3. M/s Sri Magnum Agencies, Erode.
4.

மேற்கண்ட மூன்று நிறுவனங்களும் ஒப்பந்தப்புள்ளி படிவத்திற்கான விலை மற்றும் டேணித் தொகையை செலுத்தியுள்ளனர். மேற்கண்ட மூன்று நிறுவனங்களும் வழங்கியுள்ள விலைவிகிதங்கள் பின்வருமாறு-

| SL. No. | Materials | Qty | M/s Reliant global Green Energy & Co, Coimbatore | M/s Roopa General Suppliers, Erode | M/s Magnum Agencies, Erode |
|---|---|---|---|---|---|
| | | | Rate | | |
| 1. | 70w SVL Bulb | 65 | 229.50 | 263.00 | 243.00 |
| 2. | 70w SVL Choke | 20 | 786.25 | 590.00 | 832.50 |
| 3. | 150w SVL Bulb | 60 | 323.00 | 359.00 | 342.00 |
| 4. | 150w SVL Choke | 20 | 1050.00 | 790.00 | 1100.00 |
| 5. | 250w SVL Bulb | 150 | 360.00 | 410.00 | 385.00 |
| 6. | 250w MH Bulb | 30 | 701.25 | 590.00 | 742.50 |
| 7. | 250w SVL/MH Choke | 90 | 1590.00 | 1100.00 | 1675.00 |
| 8. | SVL Ignitor 70/150/250w SVL | 200 | 170.00 | 147.00 | 180.00 |
| 9. | 250w SVL Bulb Holder | 40 | 140.25 | 190.00 | 148.50 |
| 10. | 3/20 Aluminium Wire | 13 | 331.50 | 670.00 | 351.00 |
| 11. | 7/20 Aluminium Wire | 11 | 619.00 | 890.00 | 655.00 |
| 12. | 7/16 Aluminium Wire | 5 | 1732.00 | 2400.00 | 1835.00 |
| 13. | 400w MH Bulb | 30 | 722.50 | 1190.00 | 785.00 |
| 14. | 400w MH Choke | 16 | 2500.00 | 1690.00 | 2600.00 |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் M/s Reliant Global Green Energy & Co.,Coimbatore நிறுவனம் வ.எண். 1,3,5,9,10,11,12,13-ல் குறிப்பிட்டுள்ள பொருட்களுக்கும் M/s Roopa General Suppliers, Erode நிறுவனம் வ.எண். 2,4, 6,7,8,14-ல் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களுக்கும் குறைந்த விலைவிகிதம் வழங்கியுள்ளன.

மேலும் மேற்கண்ட நிறுவனங்களில் M/s Reliant Global Green Energy & Co.,Coimbatore நிறுவனம், மற்றும் M/s Roopa General Suppliers, Erode நிறுவனம் வழங்கியிருந்த கிராம்டன் தயாரிப்பு பொருட்களுக்கான அங்கீகாரம் பெற்ற விற்பனையாளர் சான்றிதழ் குறித்த உண்மை தன்மை பற்றி அறிய கடிதம் அனுப்பியதில் M/s Reliant global Green Energy & Co,. Coimbatore நிறுவனம் அங்கீகாரம் பெற்ற விற்பனையாளர் என்றும் M/s Roopa General Suppliers, Erode நிறுவனம் அங்கீகாரம் பெற்ற விற்பனையாளர்

இல்லை எனவும் தெரியவந்துள்ளது. எனவே M/s Reliant Global Green Energy & Co., நிறுவனத்திடம் வ.எண்.2,4,6,7,8,14-ல் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களுக்கு M/s Roopa General Suppliers, Erode நிறுவனம் வழங்கியுள்ள விலைவிகிதத்திலேயே குறைத்து வழங்க 20.09.2012 தேதிய கடிதம் வாயிலாக கேட்கப்பட்டதில் அவ்வாறு குறைத்து வழங்க இயலாது என 24.09.2012 தேதிய கடிதம் வாயிலாக தெரிவித்துள்ளது.

எனவே M/s Reliant Global Green Energy & Co., நிறுவனம் வ.எண்.1,3,5,9,10,11,12,13-ல் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களுக்கு ரூ.1,35,360/- மொத்த தொகைக்கு வழங்கியுள்ள குறைந்த விலைவிகிதங்களை ஏற்கவும், வ.எண்.2,4,6,7,8,14-ல் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களுக்கு மறு ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

1. மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் M/s Reliant Global Green Energy & Co., Coimbatore நிறுவனம் வ.எண்.1,3,5,9,10,11,12,13-ல் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களுக்கு வழங்கியுள்ள குறைந்த விலைவிகித உள்ளூர் சந்தை விலைக்கு ஏற்புடையதாக உள்ளதால் அவற்றை ஏற்கவும் வ.எண். 2,4,6,7,8,14-ல் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களுக்கு மறு ஒப்பந்தப்புள்ளி கோரவும் ஒப்புதல் வழங்கலாம்.

2. தெருவிளக்கு பணியின் அவசியத்தை கருதி மாமன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று விநியோக உத்தரவு வழங்கியும் மறு ஒப்பந்தப்புள்ளி கோரியம் நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**இ1/11057/11**

**208. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**24.** ஈரோடு மாநகராட்சி மண்டலம்-2க்குட்பட்ட பகுதியில் நகர் ஊரமைப்பு துறை அபிவிருத்தி நிதியிலிருந்து போக்குவரத்து மேலாண்மை திட்டத்தின் கீழ் (TOMP) பணிகள் மேற்கொள்ள நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களுக்கு முன்மொழிவுகள் அனுப்புமாறு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.10594/2012 டிபி3 நாள் 4.5.2012ல் தெரிவிக்கப்பட்டது. அதன்பேரில் இம்மாநகராட்சி வார்டு எண்.22 சம்பத் நகர் மெயின்சாலை, போக்குவரத்து நிறைந்த சாலையாகவும், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் மற்றும் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்திற்கு செல்லும் முக்கிய சாலையாகவும், நசியனூர் செல்லும் சாலையினையும், பெருந்துறை செல்லும் சாலையினையும் இணைக்கும் மிக முக்கியமான சாலையாகவும் உள்ளதால் இச்சாலையினை மேம்படுத்த தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.150.00 லட்சத்திற்கு முன்மொழிவுகள் அனுப்பவும் அரசு நிதி ஒதுக்கீட்டிற்கு மேல் ஆகும் கூடுதல் செலவினத்தை மாநகராட்சி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. அரசு நிதி ஒதுக்கீட்டிற்கு மிகும் தொகையினை மாநகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

**இ1/1738/12**

**209. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**25.** நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.47923/இ1/2012 நாள் 20.07.2012ன்படி இம்மாநகராட்சிக்கு ஒருங்கிணைந்த நகர்புற மேம்பாட்டு இயக்கம் (IUDM) 2012-13ல் மூலமாக சாலைகள் மேம்பாடு, மழைநீர் வடிகால் கட்டுதல், தெருவிளக்கு பராமரிப்பு மற்றும் திடக்கழிவு மேலாண்மை, போன்ற பணிகளுக்கு திட்டமதிப்பீடு ரூ.1491.80 இலட்சத்திற்கு விரிவான திட்ட அறிக்கை அனுப்பி வைக்கப் பட்டதில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் (மாந-2) வழங்குதுறை அரசாணை (டி) எண்.225 நாள் 05.09.2012ல் கீழ்கண்டுள்ள விபரப்படி அனுமதி வழங்கியுள்ளது.

| வ. எண் | பணியின் பெயர் | பணியின் எண்ணிக்கை | விரிவான திட்ட அறிக்கைக்குரிய மதிப்பீட்டு தொகை (ரூ. இலட்சத்தில்) | அரசு நிதி 2012-13க்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது (ரூ. இலட்சத்தில்) | மாநகராட்சி பொது நிதி (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|
| 1 | சாலைகள் | 27 | 762.10 | 700.00 | 62.10 |
| 2 | மழைநீர் வடிகால் | 25 | 529.70 | 450.00 | 79.70 |
| 3 | தெருவிளக்கு | 6 | 100.00 | 100.00 | - |
| 4 | திடக்கழிவு மேலாண்மை | 3 | 100.00 | 0.90 | 10.00 |
| | **மொத்தம்** | | **1491.80** | **1340.00** | **151.80** |

மேற்கண்ட அரசாணை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

அலுவலகக் குறிப்பு-

மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

இ1/10031/11

**210. பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

**26.** நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.37191/இ1/2012 நாள் 14.09.2012ல் இம்மாநகராட்சிக்கு ஒருங்கிணைந்த நகர்புற மேம்பாட்டு இயக்கம் (IUDM) மூலமாக சாலைகள மேம்பாடு, மழைநீர் வடிகால் கட்டுதல், தெருவிளக்கு பராமரிப்பு மற்றும் திடக்கழிவு மேலாண்மை போன்ற பணிகளை 2012-13ல் மேற்கொள்வதற்கு நிர்வாக அனுமதி வழங்கியுள்ளார்கள். அதற்கு அரசு நிதி ஒதுக்கீடு மற்றும் மேற்கொள்ளப்படவுள்ள பணிகள் விபரம் வருமாறு.

| வ. எண் | பணியின் பெயர் | விரிவான திட்ட அறிக்கைக்குரிய மதிப்பீட்டு தொகை (ரூ. இலட்சத்தில்) | அரசு நிதி 2012-13க்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது (ரூ. இலட்சத்தில்) | மாநகராட்சி பொது நிதி (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | சாலைகள் | 762.10 | 700.00 | 62.10 |
| 2 | மழைநீர் வடிகால் | 529.70 | 450.00 | 79.70 |
| 3 | தெருவிளக்கு | 100.00 | 100.00 | - |
| 4 | திடக்கழிவு மேலாண்மை | 100.00 | 0.90 | 10.00 |
| | **மொத்தம்** | **1491.80** | **1340.00** | **151.80** |

**1. சாலைகள் மேம்பாடு**

| **வ.எண்** | **வேலையின் பெயர்** | **நீளம் (கி.மீ)** | **மதிப்பீட்டு தொகை (ரூ. இலட்சத்தில்)** |
|---|---|---|---|
| **1** | வார்டு எண்.1க்குட்பட்ட செங்குந்தபுரம் பகுதியில் புதிய தார் தளம் அமைத்து மழைநீர் வடிகால் கட்டுதல் பணி | 0.520 | 57.00 |
| **2** | வார்டு எண்.3 இந்திராபுரம் முதல் சி.எம்.நகர் வரை தார்சாலை சீரமைத்தல் | 1.000 | 10.00 |

| | | | |
|---|---|---|---|
| 3 | வார்டு எண்.4 குமிலான் பரப்பு முதல் சத்தி மெயின்ரோடு வரை (சக்கரை குடோன் அருகில்) தார் சாலை சீரமைத்தல் | 1.800 | 23.00 |
| 4 | வார்டு எண்.9 மற்றும் 10 திருமலை தெரு, சிதம்பரனார் தெரு, சத்தியமூர்த்தி தெரு ஆகிய வீதிகளுக்கு தார் சாலை புதுப்பித்தல் | 0.490 | 19.60 |
| 5 | வார்டு எண்.8 மற்றும் 11க்குட்பட்ட தீரன் சின்னமலை தெற்கு வடக்கு வீதியில் மற்றும் தீரன் சின்னமலை கிழக்கு மேற்கு வீதிகள், கலைமகள் வீதி மற்றும் சுக்கிர மணிய கவுண்டர் வலசு (வடக்கு)-3 குறுக்கு சாலைகளில் தார் தளம் புதுப்பிக்கும் பணி | 1.602 | 70.00 |
| 6 | வார்டு எண்.16க்குட்பட்ட மாமரத்து பாளையம் முதல் எல்லப்பாளையம் வரை நரிப்பள்ளம் முதல் கொங்கம் பாளையம் வரை மற்றும் எல்.வி.பி காலனி சாலைகள் புதுப்பித்தல் பணி | 3.675 | 49.70 |
| 7 | வார்டு எண்.18 அம்மன் நகர் கிருபா நகர் பாதாள சாக்கடை மேற்கொள்ளப்பட்ட சாலைகள் சீரமைப்பு செய்தல். | 0.900 | 28.00 |
| 8 | வார்டு எண்.22 ஆண்டவர் தெருவில் பாதாள சாக்கடை மேற்கொள்ளப்பட்ட சாலைகளை சீரமைப்பு செய்தல் | 0.603 | 36.00 |
| 9 | வார்டு எண்.25 பாப்பாத்தி காடு-2ல் பாதாள சாக்கடை மேற்கொள்ளப்பட்ட சாலைகளை சீரமைப்பு செய்தல் | 0.410 | 32.00 |
| 10 | வார்டு எண்.21க்குட்பட்ட நியூ டீச்சர்ஸ் காலனி பகுதியில் பாதாள சாக்கடை பணி முடிக்கப்பட்ட சாலைகள் புதுப்பித்தல் பணி | 0.862 | 49.60 |
| 11 | வார்டு எண்.31 காந்தி நகர் மற்றும் சத்யா நகரில் தார்சாலை அபிவிருத்தி பணி செய்தல் | 0.400 | 9.50 |
| 12 | வார்டு எண்.31 ஜெய்கிருஷ்ணா நகர், ராஜீவ்நகர், ரோஜா கார்டன் ஆகிய பகுதிகளில் தார் சாலை மேம்பாடு செய்தல் | 1.300 | 15.00 |
| 13 | வார்டு எண்.32க்குட்பட்ட கோல்டன் சிட்டி மெயின் மற்றும் குறுக்கு வீதிகளில் பாதாள சாக்கடைகளில் பணி முடிக்கப்பட்ட சாலைகள் புதுப்பித்தல் பணி | 0.890 | 45.00 |
| 14 | ரோஜா கார்டன் மெயின் மற்றும் குறுக்கு தெரு ராஜீவ் நகர் குறுக்கு தெரு, ராயல் அவின்யூ தெரு மற்றும் பி.கே.என். நகர் சாலைக்கு தார் சாலை அமைத்தல் (வார்டு எண். 31 மற்றும் 33) | 1.142 | 24.50 |
| 15 | வார்டு எண்.34 ஒடக்காட்டு வலசு முதல் ஆலங்காட்டு வலசு வரை மற்றும் பழனி கவுண்டன் பாளையம் சாலைகளை மேம்பாடு செய்தல் | 0.800 | 10.00 |
| 16 | வார்டு எண்.34 சென்னிமலை ரோடு முதல் முத்தம்பாளையம் வரை மற்றும் வேலப்பாறை முதல் காளிக்காடு வலசு வரை தார்சாலை மேம்பாடு செய்தல் | 0.630 | 12.50 |

| | | | |
|---|---|---|---|
| **17** | வார்டு எண்.33 புதுக்காலனி மற்றும் காரப்பாறை சாலைகளுக்கு தார்தளம் அபிவிருத்தி செய்தல் பணி | 1.820 | 20.00 |
| **18** | வார்டு எண்.42 பூசாரி சென்னிமலை தெரு, என்.ஜி.ஜி.ஓ. காலனி-2 மற்றும் வரதராஜ தெரு ஆகிய பகுதிகளுக்கு தார் சாலை அபிவிருத்தி செய்தல் | 0.605 | 38.50 |
| **19** | தண்ணீர் பந்தல் பாளையம் சாலைக்கு தார் தளம் அமைத்தல் | 0.32 | 8.40 |
| **20** | ஜவுளிநகர் மெயின் சாலையிலிருந்து, குறிஞ்சி நகர் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய சுத்திகரிப்பு நிலையம் வரை தார் தளம் அமைத்தல் | 0.31 | 18.10 |
| **21** | பாலா நகர், ஜவுளி நகர் குறுக்கு தெருவிற்கு தார் தளம் அமைத்தல் | 0.39 | 14.20 |
| **22** | சி.எம்.நகர் முதல் சொட்டையம் பாளையம் வரை தார் தளம் அமைத்தல் | 0.85 | 31.50 |
| **23** | வார்டு எண்.17 வேலன் நகர் பகுதிகளுக்கு மழைநீர் வடிகால் மற்றும் பாதாள சாக்கடை மேற்கொண்ட சாலைகளுக்கு சாலை சீரமைப்பு செய்தல் | 0.330 | 37.00 |
| **24** | வார்டு எண்.21 மற்றும் 22 காசியண்ண தெரு மற்றும் புதிய ஆசிரியர் குடியிருப்பு பகுதிகளுக்கு பாதாள சாக்கடை மேற்கொண்ட சாலைகளுக்கு சாலை சீரமைப்பு செய்தல் | 0.481 | 28.00 |
| **25** | வார்டு எண்.31 கைகாட்டிவலசு ரோடு பிரிவு நசியனூர் ரோடு முதல் ராசம்பாளையம் வரை மற்றும் வேலப்ப கவுண்டபாளையம் வலசு Burial ground வரை தார் தளம் மேம்பாடு செய்தல் | 1.860 | 25.50 |
| **26** | வார்டு எண்.34 ஜீவா நகர் முதல் முத்தம்பாளையம் பகுதி 7 வரை பாதாள சாக்கடை மேற்கொண்ட சாலைகளை சீரமைப்பு செய்தல் | 0.260 | 16.00 |
| **27** | வார்டு எண்.37 முத்தம் பாளையம் வீட்டுவசதி வாரியம் பகுதி-2ல் பிரதான சாலை மற்றும் குறுக்கு சாலை பாதாள சாக்கடை மேற்கொண்ட இடங்களில் தார்சாலை சீரமைத்தல் | 0.760 | 33.50 |
| | **TOTAL** | **24.998** | **762.100** |

**தெருவிளக்கு பராமரிப்பு**

| **வ.எண்** | **வேலையின் பெயர்** | **எண்ணிக்கை** | **மதிப்பீட்டு தொகை (ரூ. இலட்சத்தில்)** |
|---|---|---|---|
| 1 | இம்மாநகராட்சி மண்டலம் 1க்குட்பட்ட பகுதிகளில் 30 வாட்ஸ் சி.எப்.எல் தெருவிளக்குகள் அமைத்தல் பணி | 100 | 11.00 |
| 2 | இம்மாநகராட்சி மண்டலம் 2க்குட்பட்ட பகுதிகளில் 30 வாட்ஸ் சி.எப்.எல் தெருவிளக்குகள் அமைத்தல் பணி | 100 | 11.00 |
| 3 | இம்மாநகராட்சி மண்டலம் 3க்குட்பட்ட பகுதிகளில் 30 வாட்ஸ் சி.எப்.எல் தெருவிளக்குகள் அமைத்தல் பணி | 100 | 11.00 |

| | | | |
|---|---|---|---|
| **4** | இம்மாநகராட்சி மண்டலம் 4க்குட்பட்ட பகுதிகளில் 30 வாட்ஸ் சி.எப்.எல் தெருவிளக்குகள் அமைத்தல் பணி | 100 | 11.00 |
| **5** | தெருவிளக்கு பராமரிப்பு பணிகளுக்கு தேவையான தானிங்கி சுவிட்சுகள் விநியோகம் செய்து பொருத்தி கொடுத்தல் பணி | 400 | 31.00 |
| **6** | தெருவிளக்கு பராமரிப்பு மையத்திட்டு விளக்குகள் மற்றும் சாலையோர தெருவிளக்குகள் விநியோகம் செய்து பொருத்தி கொடுத்தல் பணி | 50 | 25.00 |
| | **Total** | | **100.00** |

**3. திடக்கழிவு மேலாண்மை**

| **வ.எண்** | **வேலையின் பெயர்** | **மதிப்பீட்டு தொகை (ரூ. இலட்சத்தில்)** |
|---|---|---|
| **1** | ஈரோடு மாநகராட்சியில் பாதாள சாக்கடை அடைப்புகளை நீக்கும் மற்றும் கழிவுநீர் அகற்றும் 9000லி கொள்ளளவு கொண்ட 1 எண்ணிக்கை வாகனம் விநியோகம் செய்தல் | 35.00 |
| **2** | ஈரோடு மாநகராட்சியில் திடக்கழிவு மேலாண்மைப்பணிக்கு தேவையான 100 எண்ணிக்கை இரும்பு குப்பைகலன்கள் விநியோகம் செய்தல் | 46.00 |
| **3** | ஈரோடு மாநகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு தேவையான 100 எண்ணிக்கை தள்ளுவண்டிகள் விநியோகம் செய்தல் | 19.00 |
| | **Total Amount Rs:** | **100.00** |

**4. மழைநீர் வடிகால் கட்டுதல்**

| **வ.எண்** | **வேலையின் பெயர்** | **நீளம் (கி.மீ)** | **மதிப்பீட்டு தொகை (ரூ. இலட்சத்தில்)** |
|---|---|---|---|
| **1** | ஆர்.என்.புதூர் பண்ணாடி வீதி முதல் பவானி பிரதான சாலை வரை மழைநீர் வடிகால் மற்றும் குறுக்கு வடிகால் சீரமைத்தல். | 0.900 | 15.00 |
| **2** | வார்டு எண்.3 சூர்யா நகர் பிரிவு முதல் பவானி பிரதான சாலை வரை மழைநீர் வடிகால் கட்டுதல் | 0.400 | 16.00 |
| **3** | பூசாரி தோட்டம் பகுதியில் மழைநீர் வடிகால் கட்டுதல் | 0.620 | 16.50 |
| **4** | முனியப்பன் நகர் பிரதான சாலை மற்றும் 1-வது முதல் 6வது குறுக்கு சாலைகளில் மழைநீர் வடிகால் கட்டுதல் | 1.100 | 36.20 |

| | | | |
|---|---|---|---|
| 5 | சொட்டையம்பாளையம் முதல் இந்திராபுரம் வரை மழைநீர் வடிகால் புதுப்பித்து கட்டுதல் | 1.130 | 39.00 |
| 6 | வார்டு எண்.17 மாநகராட்சிக்குட்பட்ட மருத்துவர் காலனி பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் குறுக்கு வடிகால் கட்டுதல் | 1.245 | 20.00 |
| 7 | வார்டு எண்.18 மாநகராட்சிக்குட்பட்ட அம்மன் நகர் மற்றும் பி.பி.கார்டன் பகுதிகளுக்கு மழைநீர் வடிகால் கட்டுதல் | 1.470 | 40.00 |
| 8 | வார்டு எண்.19 மாநகராட்சிக்குட்பட்ட காந்திநகர் பகுதிக்கு மழைநீர் வடிகால் மற்றும் குறுக்கு வடிகால் கட்டுதல் | 0.780 | 12.50 |
| 9 | வார்டு எண்.16ல் மாநகராட்சிக்குட்பட்ட கங்காபுரம் பகுதிக்கு மழைநீர் வடிகால் மற்றும் குறுக்கு வடிகால் கட்டுதல் | 1.245 | 24.00 |
| 10 | வார்டு எண்.16 மாநகராட்சிக்குட்பட்ட எல்.வி.பி. காலனி பகுதிக்கு மழைநீர் வடிகால் மற்றும் குறுக்கு வடிகால் கட்டுதல் | 0.380 | 8.50 |
| 11 | வார்டு எண்.26 மேட்டூர் சாலை மத்திய பேருந்து நிலையம் முதல் பரிமளம் காம்பளக்ஸ் வரை மழைநீர் வடிகால் மற்றும் குறுக்கு வடிகால் கட்டுதல் | 0.315 | 19.00 |
| 12 | வார்டு எண்.31 தெற்குபள்ளம் மணியன்காடு வரை மழைநீர் வடிகால் கட்டுதல் | 0.390 | 13.00 |
| 13 | வார்டு எண்.31 வி.ஐ.பி நகர் முதல் தெற்குபள்ளம் வரை மழைநீர் வடிகால் கட்டுதல் | 0.500 | 18.50 |
| 14 | வார்டு எண்.33 பெருந்துறைரோடு முதல் கீழ்திண்டல் வரை மழைநீர் வடிகால் கட்டுதல் | 0.075 | 5.00 |
| 15 | வார்டு எண்.33 திண்டல் நஞ்சுனாபுரம் ரோடு முதல் கருடா வீடு மற்றும் புதுகாலனி பகுதிகளில் மழைநீர் வடிகால் மற்றும் ஆர்.சி.சி சிறுபாலம் கட்டுதல் | 0.760 | 22.00 |
| 16 | வார்டு எண்.34 முத்தம்பாளையம் பேஸ்-1 சி டைப் மற்றும் எச் டைப் பகுதியில் மழைநீர் வடிகால் கட்டுதல் | 0.485 | 19.50 |
| 17 | வார்டு எண்.39 திரு.வி.க சாலை பிரதான சாலை மற்றும் போலீஸ் நிலையம் முதல் மேற்கு அம்பேத்கார் வீதிகளுக்கு மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டுதல் | 0.455 | 21.00 |
| 18 | வார்டு எண்.40 காந்திஜி பிரதான சாலையில் 2நெம்பர் பஸ் ஸ்டாப் முதல் பெரியார் சாலை (ஆர்.ஐ அலுவலகம்) வரை மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைத்தல் | 0.360 | 12.00 |
| 19 | வார்டு எண்.45 புதுமை காலனியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டுதல் | 0.240 | 14.00 |

| | | | |
|---|---|---|---|
| 20 | வார்டு எண்.60 மோளகவுண்டனபாளையம் முதல் ரயில் வே கேட் மற்றும் வெண்டிபாளையம் ரயில்வே பாலம் அருகில் வரை மழைநீர் வடிகால் கட்டுதல் | 0.701 | 32.00 |
| 21 | வார்டு எண்.48 குமரன் நகர் பகுதியில் மழைநீர் வடிகால் கட்டுதல் | 0.915 | 25.00 |
| 22 | வார்டு எண்.50 மலர் நகர் முல்லை நகர் பகுதிகளுக்கு மழைநீர் வடிகால் கட்டுதல் | 0.620 | 23.00 |
| 23 | வார்டு எண்.49 கீட்டி நகர் மற்றும் கரூர் பைபாஸ் சாலைகளில் மழைநீர் வடிகால் கட்டுதல் | 0.855 | 22.00 |
| 24 | வார்டு எண்.47 பாரதி நகர் விடுபட்ட பகுதிகளுக்கு மழைநீர் வடிகால் கட்டுதல் | 1.575 | 33.00 |
| 25 | வார்டு எண்.47 & 46 வினாயகர் கோவில் வீதி-2 மற்றும் கக்கன்ஜி நகர் விடுபட்ட பகுதிகளுக்கு மழைநீர் வடிகால் கட்டுதல் | 0.700 | 23.00 |
| | **Total** | **18.216** | **529.70** |

மேற்கண்டவாறு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ள பணிகளுக்கும் இதில் அரசு நிதி ஒதுக்கீடு ரூ.1340.00 இலட்சம் போக கூடுதலாக வரும் தொகை ரூ.151.80 இலட்சத்தை மாநகராட்சி பொதுநிதியிலிருந்து ஈடு செய்து கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. அரசு நிதி ஒதுக்கீடு போக கூடுதலாக வரும் தொகை ரூ.151.80 இலட்சத்தை மாநகராட்சி பொதுநிதியிலிருந்து ஈடு செய்து கொள்ளவும் மேற்படி பணிகளை 28.02.2013க்குள் முடிக்க கால அளவு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்டதால் மாமன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**இ1/10031/11**

**211. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**27.** ஈரோடு மாநகராட்சி பகுதியில் திடக்கழிவுகளை உருவாக்கும் நிறுவனங்களை முறைப்படுத்தி கழிவுகளை சேகரிக்கவும், அவற்றினால் ஏற்படும் அதிக அளவிலான கழிவுகளை கையாளுவதற்கு மாநகராட்சிக்கு ஏற்படும் செலவினங்களை குறைத்திடவும், மாநகராட்சி பகுதியினை தூய்மையாக வைத்திடவும் கீழ்க்கண்டவாறு நிறுவனங்களிடம் நிர்வாகக் கட்டணம் வசூல் செய்து மாநகராட்சி மூலமாக திடக்கழிவுகளை அகற்ற நடவடிக்கை மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண். | நிறுவனத்தின் தன்மை | நிர்வாகக் கட்டணம் ஒவ்வொரு மாதத்திற்கும் ரூ. |
|---|---|---|
| 1. | பேக்கரி | 500.00 |
| 2. | டிபன் ஸ்டால் | 500.00 |
| 3. | மெஸ் | 1000.00 |
| 4. | உணவு விடுதி | 2000.00 |
| 5. | உணவுடன் கூடிய தங்கும் விடுதி | 3000.00 |
| 6. | குளிர்பானம் மற்றும் பழச்சாறு கடைகள் | 1000.00 |
| 7. | காய்கறிகள் மற்றும் பழமுதிர் நிலையங்கள் | 3000.00 |
| 8. | டிபார்ட்மெண்டல் ஸ்டோர்ஸ் | 2000.00 |
| 9. | இதர நிறுவனங்கள் (நிபந்தனைக்குட்பட்டு) | 2000.00 |

அலுவலகக் குறிப்பு-

மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**எச்1/5043/12**

**212. ஒத்தி வைக்கப்பட்டது.**

**28.** பாரதியார் பல்கலைக்கழகம், முதுநிலை படிப்புக்கான விரிவாக்க மையம், ஈரோடு இயக்குநர் (பொ) அவர்களின் 17.09.2012ம் தேதிய கடித எண்.BU/E3/Land and-PG/ 2012-ல் 2012-13ம் ஆண்டிற்கு ஈரோட்டில் உயர்தொழில்நுட்ப ஆய்வுக் கூடத்துடன் கூடிய முதுநிலை படிப்புக்கான விரிவாக்க மையத்தினை உடனடியாக துவங்க வேண்டும் என்பதை கருத்தில் கொண்டு, பாரதியார் பல்கலைக் கழகத்திற்கு ஈரோட்டில் வேறொரு இடத்தில் இடம் வாங்கி கட்டிடம் கட்டிக் கொள்ளும்வரை தற்காலிகமாக புதிதாக துவங்க உள்ள முதுநிலை படிப்புக்கான விரிவாக்க மையத்தினை மாநகராட்சி பாலசுப்பராயலு வீதி ஆரம்பப்பள்ளியில் இடம் ஒதுக்கீடு செய்து கொடுக்குமாறு கோரியுள்ளார்கள்.

ஆகவே இம்மாநகராட்சி பாலசுப்பராயலு வீதி ஆரம்பப் பள்ளியின் முதல் தளத்தின் ஒரு பகுதி தற்போது காலியாக உள்ளது. எனவே மையம் புதிதாக தற்காலிகமாக துவங்க உள்ளதால் மாநகரப் பொறியர் அவர்கள் நிர்ணயம் செய்யும் வாடகையை செலுத்தக்கோர அனுமதி வழங்கலாம். மேலும் பாரதியார் பல்கலைக்கழகம், முதுநிலை படிப்புக்கான விரிவாக்க மையம் அமைப்பதற்கு இம்மாநகராட்சி பாலசுப்பராயலு வீதி ஆரம்பப் பள்ளியின் முதல் தளத்தில் இடம் ஒதுக்கீடு செய்து உத்தரவு வழங்கியமைக்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

பாரதியார் பல்கலைக் கழகத்தின் உயர்தொழில்நுட்ப ஆய்வகத்துடன் கூடிய மையம் ஈரோட்டில் புதிதாக தற்காலிகமாக உடனடியாக துவங்க இருப்பதால் மேற்படியாரின் அவசர அவசியம் கருதி, மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி, வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி மையம் அமைக்க இடம் ஒதுக்கீடு செய்தும், மாநகரப் பொறியர் அவர்கள் நிர்ணயம் செய்யும் வாடகையை செலுத்த கோரியும் உத்திரவு வழங்கியமைக்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**இ1/2283/12**

**213. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**29.** ஈரோடு மாநகராட்சி மண்டலம்-4க்குட்பட்ட கருங்கல்பாளையம் மேல்நிலை நீர்தேக்க தொட்டிக்கு செல்லும் 8இன்ச் சி.ஐ. பிரதான குழாய் உடைப்பு ஏற்பட்டு பம்பிங் செய்ய இயலாமல் குடிநீர் விநியோகம் முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி பழுதினை சரி செய்ய வேண்டியதன் அவசர அவசியம் கருதி மாநகராட்சிகள் சட்டம் பிரிவு-15ன் கீழ் அனுமதி பெற்று 31.07.2012ல் உள்ளூர் விலைப்புள்ளிகள் பெறப்பட்டதின் விபரம் வருமாறு:-

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | மொத்த செலவினம் |
|---|---|---|
| 1. | திரு. வி. தாமோதரன், ஈரோடு | ரூ. 24,330/- |
| 2. | திரு. ஏ. முனியப்பன், ஈரோடு | ரூ. 24,509/- |
| 3. | திரு. பி. தங்கராஜ், ஈரோடு | ரூ.24,637/- |

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவாக விலைப்புள்ளி ரூ.24,330/-க்கு கொடுத்துள்ள திரு. வி. தாமோதரன், ஈரோடு அவர்களின் விலைப்புள்ளி உள்ளூர் சந்தை நிலவரத்திற்கு ஏற்புடையதாக இருந்ததால் விலைப்புள்ளியினை ஏற்று பணி உத்திரவு வழங்கப்பட்டு பழுதுகளை சரி செய்யப்பட்டு பின்னர் பட்டியல் தொகை வழங்குவதற்கும் குடிநீர் விநியோகப் பணிகளின் அவசர அவசியம் கருதி மேற்படி குழாய் பழுதுகளை மாநகராட்சிகள் சட்டம் பிரிவு-15ன் கீழ் சரி செய்துள்ள விபரம் மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

அலுவலகக் குறிப்பு-

பதிவு செய்யலாம்.

**இ2/02009/12**

**214. பதிவு செய்யப்பட்டது.**

**30.** கரூர் நகராட்சியில் மருத்துவ அலுவலராகப் பணிபுரிந்து வரும் திருமதி. சவிதாராணி என்பவர் தனது குடும்பம் ஈரோட்டில் உள்ளதாகவும், தனது குழந்தைகளின் படிப்பை கவனிக்கவும் வயதான மாமியாரை கவனிப்பதற்காகவும் ஈரோடு மாநகராட்சியில் காலியாக உள்ள மருத்துவ அலுவலர் பணியிடத்திற்கு ஒருவழி மாறுதலில் செல்ல விண்ணப்பம் வழங்கி கரூர் நகர்மன்றத்தில் ஈரோடு மாநகராட்சிக்கு பணி மாறுதலில் செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன் நகலுடன் ஈரோடு மாநகராட்சிக்கு ஒருவழி மாறுதலில் வர அனுமதி வேண்டி விண்ணப்பம் வழங்கியுள்ளார்.

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.55037/11/மா.ந.அ2 நாள் 15.12.11 மற்றும் 15.03.12ம் நாளிட்ட கடிதத்தில் மேற்படி மருத்துவ அலுவலர் ஈரோடு மாநகராட்சிக்கு ஒருவழி மாறுதல் கோரியுள்ளதற்கு உரிய மாமன்றத் தீர்மானம் பெற்று பரிந்துரையுடன் செயற்குறிப்பு அனுப்ப தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈரோடு மாநகராட்சிக்கு அரசு ஆணை எண். 206 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை நாள் 22.10.08ன்படி 8 மருத்துவ அலுவலர்கள் பணியிடம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. தற்போது ஈரோடு மாநகராட்சியில் 1 (ஒரு) மருத்துவ அலுவலர் பணியிடம் காலியாக உள்ளது.

மேற்படி காலியாக உள்ள மருத்துவ அலுவலர் பணியிடத்திற்கு மருத்துவர் ஆர். சவிதாராணி என்பவரை கரூர் நகராட்சியிலிருந்து ஈரோடு மாநகராட்சிக்கு ஒரு வழி மாறுதலில் வர அனுமதிப்பது குறித்து மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

மருத்துவ பிரிவு மருத்துவ அலுவலர் பணியின் அவசியம் கருதி காலியாக உள்ள மருத்துவ அலுவலர் பணியிடத்திற்கு ஒருவழி மாறுதலில் வர மாமன்றம் அனுமதிக்கலாம்.

**சி1/1154/12**

**215. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**31.** மண்டலம்-1க்குட்பட்ட வார்டு எண்.8 மல்லிநகர் நெசவாளர் காலனி பகுதியில் சிறுபாலத்தை உடைத்து அப்புறப்படுத்திவிட்டு வடிகாலினை உயர்த்திக் கட்டுதல் பணிக்கு மதிப்பீட்டுத் தொகை ரூ.8,00,000/- வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் 06.07.12 தேதியில் முன் அனுமதி பெறப்பட்டது. மாமன்றம் தீர்மான எண்.147 நாள் 30.07.12ல் அனுமதி வழங்கியுள்ளது. இவ்வேலைக்கு 31.07.12 அன்று முதல் முறையாக வரப்பெற்ற ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளியை மதிப்பீட்டு விலைவிகிதத்துடன் ஒப்புநோக்கும் பொழுது பெறப்பட்ட விபரம் கீழ்க்கண்டவாறு-

1. திரு. எம்.சி. சாமியப்பன் (-) 0.04 சதவீதம் மதிப்பீட்டை விட குறைவு

மேற்படி ஒப்பந்ததாரர் 1 சதவீதம் டேவணித் தொகை மாநகராட்சியில் தொகையாக செலுத்தியுள்ளார்.

எனவே வரப்பெற்ற ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட (-)0.04 சதவீதம் குறைவான விலைவிகிதம் உள்ளதால், இவ்வலுவலக ம.எண்.1450/12 நாள் 03.08.12ல் மேலும் விலையை குறைத்துக் கொடுக்க அறிவிப்பு கொடுக்கப்பட்டது. ஒப்பந்ததாரர் தனது 06.08.12ல் கட்டுமான பொருள் நாளுக்கு நாள் உயர்ந்து கொண்டே போவதாலும், வேலைக்கு கூலி ஆட்கள் கிடைப்பதில்லை என்பதாலும், மேலும் விலையை குறைத்துக் கொடுக்க இயலாத நிலை உள்ளது என தெரிவித்துள்ளனர். எனவே வரப்பெற்ற ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட (-) 0.04 சதவீதம் குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள திரு. எம்.சி. சாமியப்பன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவும் பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

இவ்வேலைக்கு முதல் முறையாக வரப்பெற்ற ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட (-) 0.04 சதவீதம் குறைவு விலைவிகிதம் உள்ள திரு. எம்.சி.சாமியப்பன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை அனுமதிக்கலாம்.

பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**இ1/1450/12**

**216. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**32.** இம்மாநகராட்சி பகுதிகளில் புதிய கழிப்பிடங்கள் கட்டுதல் மற்றும் ஏற்கெனவே உள்ள பழுதடைந்த பொது கழிப்பிடங்களை சீரமைத்தல் பணிக்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். 21951/பி-1/2012 நாள் 25.09.12-ன்படி 2012-13 ஆம் ஆண்டிற்கு மானயமாக ரூ.51.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2012-13ல் மேற்கொள்ளப்படும் பணிகள் விபரம் பின்வருமாறு:-

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | வார்டு எண்.7 பழையமாரியம்மன் கோயில் வீதியில் புதிய பொது கழிப்பிடம் கட்டும் பணி | 12.00 |
| 2 | கருப்பகவுண்டன்புதுர் வீதியில் பழுதடைந்துள்ள பொது கழிப்பிடம் மராமத்து பணிகள் செய்தல் | 3.50 |
| 3 | வீரப்பண்ணாடிபுதுார் பகுதியில் பழுதடைந்துள்ள பொது கழிப்பிடம் மராமத்து பணிகள் செய்தல் | 3.50 |
| 4 | மரவபாளையம் பகுதியில் (புதைகாடு அருகில்) பழுதடைந்துள்ள பொது கழிப்பிடம் மராமத்து பணிகள் செய்தல் | 3.50 |
| 5 | ராஜீவ் நகர் பகுதியில் பழுதடைந்துள்ள பொது கழிப்பிடம் மராமத்து பணிகள் செய்தல் | 3.50 |
| 6 | வார்டு எண்.16 எல்லப்பாளையம் பகுதியில் ஏற்கனவே உள்ள கழிப்பிடத்தில் பராமரிப்பு பணிகள் செய்தல் | 4.20 |
| 7 | வார்டு எண்.16 கொங்கம்பாளையம் பகுதியில் ஏற்கனவே உள்ள கழிப்பிடத்தில் பராமரிப்பு பணிகள் செய்தல் | 4.20 |
| 8 | வார்டு எண்.16 நரிப்பள்ளம் பகுதியில் பொதுகழிப்பிடம் கட்டும் பணி | 12.00 |
| 9 | வார்டு எண்.59 மதுரைவீரன் கோயில் வீதி சந்தில் ஏற்கனவே உள்ள கழிப்பிடத்தில் பராமரிப்பு பணிகள் செய்தல் | 2.00 |
| 10 | வார்டு எண்.56 மாரிமுத்து வீதியில் ஏற்கனவே உள்ள கழிப்பிடத்தில் பராமரிப்பு பணிகள் செய்தல் | 2.50 |
| 11 | வார்டு எண்.46 ரகுபதிநாய்க்கன் பாளையம் அரிஜன காலனி பகுதியில் ஏற்கனவே உள்ள கழிப்பிடத்தில் பராமரிப்பு பணிகள் செய்தல் | 1.80 |
| 12 | கொல்லம்பாளையம் (பூங்கா அருகில்) புதிய பொதுகழிப்பிடம் கட்டும் பணி | 10.00 |
| 13 | வார்டு எண்.38 நேதாஜி நகர் பகுதியில் ஏற்கனவே உள்ள கழிப்பிடத்தில் பராமரிப்பு பணிகள் செய்தல் | 3.60 |
| 14 | வார்டு எண்.44 பெரியார் நகர் பகுதியில் ஏற்கனவே உள்ள கழிப்பிடத்தில் பராமரிப்பு பணிகள் செய்தல் | 1.40 |
| | **மொத்தம்** | **67.70** |

இப்பணிகளை குறிப்பிட்ட காலத்திற்குள் முடித்து முடிவறிக்கை அரசுக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும் எனவும் மேற்படி கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டபணிகளுக்கு அரசு நிதி ஒதுக்கீடு ரூ.51.00 இலட்சம் போக கூடுதலாக வரும் தொகை ரூ.16.70 இலட்சத்தை பொது நிதியிலிருந்து ஈடு செய்து கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப் படுகிறது.

அலுவலகக் குறிப்பு-
1. மாமன்றம் பதிவு செய்யலாம்
2. நிதி ஒதுக்கீடு போக கூடுதலாக வரும் தொகை ரூ.16.70 இலட்சத்தை பொது நிதியிலிருந்து ஈடு செய்து கொள்ளவும், இப்பணியை குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்க கால அளவு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதால் தற்போது மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரி நடவடிக்கை மேற்கொண்டதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

**இ1/10096/11**

**217. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**33.** இம்மாநகராட்சி பகுதிகளில் பழுதடைந்துள்ள சாலைகளை பிளாஸ்டிக் கழிவுகளை பயன்படுத்தி தார்சாலைகள் சீரமைத்தல் பணிக்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.29225/2011/E3 நாள் 25.09.2012-ன் படி 2012-13 ஆம் ஆண்டிற்கு மானியமாக ரூ.92.31 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2012-13ல் மேற்கொள்ளப்படும் சாலைப்பணிகள் விபரம் பின்வருமாறு:-

| வ. எண் | பணியின் பெயர் | சாலையின் நீளம் மீ | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | வார்டு எண்.2 நீதித்துறை காலனி பகுதியில் பிளாஸ்டிக் கழிவுகளை பயன்படுத்தி தார் சாலை சீரமைத்தல் பணி | 700 | 10.90 |
| 2 | சித்தோடு மெயின் சாலையிலிருந்து பெருமாள் மலை இணைப்பு சாலைக்கு பிளாஸ்டிக் கழிவுகளை பயன்படுத்தி தார் சாலை சீரமைத்தல் பணி | 1480 | 24.40 |
| 3 | வார்டு எண்.16 கொளத்துபாளையம் முதல் மொக்கையம்பாளையம் வரை பிளாஸ்டிக் கழிவுகளை பயன்படுத்தி தார் சாலை சீரமைத்தல் பணி | 1600 | 24.00 |
| 4 | வார்டு எண்.16 மாமரத்துபாளையம் முதல் எல்லப்பாளையம் செல்லும் சாலை வரை பிளாஸ்டிக் கழிவுகளை பயன்படுத்தி தார் சாலை சீரமைத்தல் பணி | 800 | 12.50 |
| 5 | வார்டு எண்.33-ல் திண்டல் முருகன் கோயில் முதல் மேல் திண்டல் வரை பிளாஸ்டிக் கழிவுகளை பயன்படுத்தி தார் சாலை சீரமைத்தல் பணி | 1130 | 12.50 |
| 6 | வார்டு எண்.31-ல் வில்லரசம்பட்டி சாணார் பாளையம் முதல் ஒண்டிகாரன் பாளையம், வில்லரசம்பட்டி பைபாஸ் முதல் குப்புராஜ் நகர் சந்திப்பு வரை கருவேலம்பட்டி வலசு முதல் மேல் நிலை நீர்தேக்கத் தொட்டி வரை மற்றும் வார்டு எண்.33 தெப்பக்குளம் சாலையிலிருந்து வித்யாநகர் மெயின்சாலை மற்றும் டைமன்ட் நகர் சாலைகளை பிளாஸ்டிக் கழிவுகளை பயன்படுத்தி தார் சாலை சீரமைத்தல் பணி | 2510 | 24.00 |
| | **மொத்தம்** | **8220** | **108.30** |

இப்பணிகளை 28.2.2013க்குள் முடித்து முடிவறிக்கை அரசுக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும் எனவும் மேற்படி கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டபணிகளுக்கு அரசு நிதி ஒதுக்கீடு ரூ.92.31 இலட்சம் போக கூடுதலாக வரும் தொகையினை பொது நிதியிலிருந்து ஈடு செய்து கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப் படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

1. மாமன்றம் பதிவு செய்யலாம்

2. நிதி ஒதுக்கீடு போக கூடுதலாக வரும் தொகை ரூ.15.99 இலட்சத்தை பொது நிதியிலிருந்து ஈடு செய்து கொள்ளவும், இப்பணியை 28.2.2013க்குள் முடிக்க கால அளவு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதால் தற்போது மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொண்டதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

**இ1/269/12**

**218. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**34.** ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட அனைத்து நான்கு மண்டலங்களிலும் சேர்த்து மொத்தம் 18239 எண்ணிக்கை தெருவிளக்குகள் பயன்பாட்டில் உள்ளன. மேற்கண்ட தெருவிளக்குகளை பராமரித்துவர தேவைப்படும் மின் உதிரி பொருட்கள் குறைவாக உள்ளதால் தேவைப்படும் உதிரி பொருட்களை ரூ.20.00 இலட்சம் உத்தேச செலவில் வாங்கி பயன்படுத்த மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2. தெருவிளக்கு பராமரிப்பு பணியின் அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**இ1/5185/12**

**219. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**35.** நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணையில் அனைத்து நகராட்சி மற்றும் மாநகராட்சிகளில் பணிபுரிந்து வரும் பொறியாளர்களுக்கு "கழிவுநீரை சுத்திகரித்தல் முறையினை வடிவமைத்து நிறுவுதல்" (Design and implementation of Decentralised waste water Treatment System) தொடர்பான பயிற்சி 05.10.12 முதல் 07.10.12 முடிய 3 நாட்கள், ஹோட்டல் ரம்யா, வில்லியம்ஸ் ரோடு, திருச்சி என்ற முகவரியில் நடைபெற உள்ளது என்றும் அதில் செயற்பொறியாளர் திரு. சுரேஷ்குமார் அவர்களை கலந்து கொள்ளவும் மேற்படி பயிற்சிக்கான கட்டணம் ரூ.22,000/-க்கான வங்கி வரைவோலையை சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளிலிருந்து கொண்டு வரவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி பயிற்சிக் கட்டணம் ரூ.22,000/-க்கான செலவினத்தை மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

ரூ.22,000/- பயிற்சிக் கட்டணம் வழங்க வேண்டியதன் அவசர அவசியம் கருதி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று செலவினம் மேற்கொண்டதை மாமன்றம் அங்கீகரிக்கலாம்.

**சி1/448/12**

**220. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**36.** ஈரோடு மாநகராட்சி மண்டலம்-3க்குட்பட்ட பகுதிகளில் பருவமழை பொய்த்து விட்ட காரணத்தால் ஆழ்துளை குழாய் கிணறுகளில் நீர்மட்டம் வெகுவாக குறைந்த காரணத்தால் ஆழ்குழாய் கைபம்பு, சிறுமின் விசை பம்பு மற்றும் கம்பரசர் மோட்டார்களை இயக்கி பொது விநியோகம் செய்ய இயலாத காரணத்தால் 24000 லிட்டர் கொள்ளளவு கொண்ட லாரி மூலம் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் விநியோகம் செய்ய ரூ.490000/-க்கு 18.07.12ம் தேதியில் வார்டுகள் குழு தலைவர் அவர்களின் முன் அனுமதி (மற்றும் வ.கு தீர்மான எண்.90 நாள் 11.08.12) பெற்று 27.07.12 தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்திருந்த மெசர்ஸ் காவேரி வாட்டர் சப்ளையர்ஸ், பெருந்துறை அவர்களின் ரூ.1395/- (லோடு ஒன்றுக்கு)ஐ ஏற்று வார்டுகள் குழு தலைவர் அவர்களின் முன் அனுமதி (மற்றும் வ.கு. தீர்மான எண்.100 நாள் 11.08.12) பெற்று வேலை உத்திரவு வழங்கப்பட்டு குடிநீர் பற்றாக்குறை உள்ள பகுதிகளுக்கு 28.07.12 முதல்

குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி அனுமதிக்கப்பட்ட தொகை 14.10.12 தேதியுடன் செலவினமாவதாலும் தற்போது மேலும் பருவமழை பெய்யாத காரணத்தால் வறட்சியை சமாளிக்க ஏதுவாக 15.10.12 முதல் 31.10.12 வரை ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஒப்பந்ததாரர் மூலம் அதே தொகைக்கு குடிநீர் லாரி மூலம் குடிநீர் விநியோகம் செய்யும் பணியை மேற்கொள்ளவும் அதற்கான கூடுதல் செலவினம் ரூ.150000/-க்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டி மாமன்ற பொருள் வரைவு அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

1. அனுமதி வழங்கலாம்.

2. வறட்சியை முன்னிட்டும் குடிநீர் விநியோக அவசர அவசியம் கருதியும் 15.10.12 முதல் 31.10.12 வரை ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஒப்பந்ததாரர் மூலம் அதே தொகைக்கு குடிநீர் லாரி மூலம் குடிநீர் விநியோகம் செய்யும் பணியை மேற்கொள்ளவும் அதற்கான கூடுதல் செலவினம் ரூ.150000/-க்கு மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

**இ2/2468/12**

**221. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**37.** ஈரோடு மாநகராட்சி மண்டலம்-2க்குட்பட்ட சம்பத் நகர் நீரூந்து நிலையம் கடந்த 2000-ஆம் வருடம் வடிவமைத்து செய்து கட்டப்பட்டது. இந்த நீரந்து நிலையத்தில் இரண்டு எண்ணம் 20 கு.வே மற்றும் இரண்டு எண்ணம் 10 கு.வே திறன் கொண்டு மின்மோட்டார்கள் (20 எச்.பி -2 மற்றும் 10 எச்.பி-2) பயன்பாட்டில் இருந்து வருகின்றன. இந்த நீருந்து நிலையத்தின் மூலம் மண்டலம்-2 வார்டு எண்கள்.20,21 மற்றும் 22 மண்டலம்-3 வார்டு எண்.32 ஆகிய பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. 2000-2001ஆம் வருடம் நிறுவப்பட்ட மேற்கண்ட மின்மோட்டார்கள் மற்றும் பம்புகள் இன்று வரை பலமுறை பெரிய அளவில் பழுதுகள் ஏற்பட்டும் சரிசெய்யப்பட்டு தனது திறனில் 60 சதவீதம் (Efficiency) தான் இயங்கி வருகின்றது. மேலும் அடிக்கடி பழுதுகள் ஏற்படுவதால் குடிநீர் விநியோகம் மிக மோசமான அளவில் பாதிக்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட நான்கு வார்டுகளில் ஏறத்தாழ 40000 மக்கள் தொகைக்கு குடிநீர் விநியோகம் சீரான அளவில் செய்ய இயலாத நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே மேற்கண்ட 4 மின்மோட்டார்களை மாற்றிவிட்டு வடிவமைப்பின் (As per Design) இரண்டு எண்கள் 40 கு.வே திறனுள்ள மின்மோட்டார்கள் மற்றும் பம்புகள், 5 எச்.பி திறனுள்ள வேக்கம் (Vaccum Pump) ஆகியவற்றை புதியதாக வாங்கி பொறுத்துவதற்கு உத்தேச செலவினம் ரூ.16.80 லட்சத்திற்கு குடிநீர் விநியோக நிதியின் (Water Supply Fund) கீழ் மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

குடிநீர் பணியின் அவசியம் கருதி அனுமதி வழங்கலாம்.

**இ2/3239/12**

**222. அனுமதி வழங்கப்பட்டது.**

**38.** ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம்-2ல் பவானி சாலை அசோசியேசன் பங்க் எதிரே சாலையில் உள்ள காய்ந்த மரங்கள் இரண்டும் மற்றும் வ.உ.சி. பூங்காவில் உள்ள கருவேல மரக்கிளைகள் ரோட்டை மறைத்து போக்குவரத்திற்கு பாதிப்புகளை ஏற்படுத்துவதாகவும் மற்றும் வ.உ.சி பூங்காவிலுள்ள மரத்தின் கிளைகள் திருநகர் காலனி செல்லும் சாலையை முழுவதும் மறைத்து நிற்பதால் பலமான காற்று அடித்தால் மேற்படி மரக்கிளைகள் ஒடிந்து போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படுவதுடன் விபத்துகள் ஏற்படவும் வாய்ப்புள்ளதால் மேற்படி மரங்களை அப்புறப்படுத்த கேட்டு துணைக் காவல் கண்காணிப்பாளர், போக்குவரத்து பிரிவு, ஈரோடு அவர்களின் 07.09.12ந் தேதிய கடிதத்தில் கோரப்பட்டுள்ளது.

எனவே பவானி சாலை அசோசியேசன் பங்க் எதிரே சாலையிலுள்ள காய்ந்த மரங்கள் இரண்டடையும் பொது ஏலம் மூலம் அப்புறப்படுத்த மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியத்தை கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை தொடர்ந்தமைக்கும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**இ2/3309/12**

**223. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**39.** இம்மாநகராட்சி மைய அலுவலகத்தில் பயன்பாட்டில் உள்ள 25 கே.வி.ஏ ஜெனரேட்டரில் (Short Circute) காரணமாக பழுதடைந்து இயக்க இயலாத நிலையில் இருந்ததால் அலுவலக பணிகளின் அவசர அவசியம் கருதி மாநகராட்சிகள் சட்டம் பிரிவு-15 நாள் 29.08.12ன் அனுமதியின் கீழ் பழுதுகள் சரிசெய்தல் பணிக்கு உள்ளூர் விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு:-

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | மொத்த செலவினம் ரூ. |
|---|---|---|
| 1. | சன் அண்டு கோ, ஈரோடு | 79,279- |
| 2. | எம். ஜோதி, திருச்சி | 80,092- |
| 3. | ஷரீஸ் இன்ஜினியரிங், ஈரோடு | 79,758- |

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவாக ரூ.79,279/-க்கு கொடுத்துள்ள சன் அண்டு கோ, ஈரோடு நிறுவனத்தாரின் குறைந்த விலைவிகித விலைப்புள்ளி உள்ளூர் சந்தை நிலவரத்திற்கு ஏற்புடையதாக இருந்ததால் பணி உத்திரவு வழங்கப்பட்டு ஜெனரேட்டரில் உள்ள பழுதுகள் சரி செய்யப்பட்டு பின்னர் பட்டியல் தொகை வழங்கப்பட்டது. அலுவலக 25 கே.வி.ஏ ஜெனரேட்டரில் உள்ள பழுதுகள் மாநகராட்சிகள் சட்டம் பிரிவு-15ன் கீழ் சரி செய்யப்பட்டுள்ள விபரம் மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

அலுவலகக் குறிப்பு-

மாமன்றம் பார்வையிட்டும் பதிவு செய்யலாம்.

**இ1/4556/12**

**224. பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

**40.** ஈரோடு மாநகராட்சியின் 2010-2011ம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

மாமன்றம் பார்வையிட்டு அனுமதிக்கலாம்.

**சி4/5183/12**

**225. பார்வையிட்டு அனுமதிக்கப்பட்டது.**

**41.** ஈரோடு மாநகராட்சியின் 2011-2012ம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

மாமன்றம் பார்வையிட்டு அனுமதிக்கலாம்.

**சி4/5184/12**

**226. பார்வையிட்டு அனுமதிக்கப்பட்டது.**

**42. 7-வது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு. எஸ். செல்வன் அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானம்.**

- அன்னை சத்யா நகருக்கு உட்பட்ட பகுதிகளுக்கு தார்சாலை அமைக்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- அன்னை சத்யா நகரில் உள்ள அனைத்து சாக்கடைகளையும் அகலப்படுத்திக் கொடுக்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

- அன்னை சத்யா நகரில் உள்ள சமுதாயக் கூடத்தில் மின், தண்ணீர் வசதி செய்து தர இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- அன்னை சத்யா நகரில் பெண்களுக்கான தனி கழிப்பிடம் ஒன்று அமைக்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- அன்னை சத்யா நகர், அஜந்தா நகர் பகுதிகளில் குடிநீர் தொட்டி அமைத்துக் கொடுக்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- லஷ்மி நகரில் பள்ளமான பகுதியில் உள்ள வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்து விடுவதால் தடுப்பு சுவர் கட்டித்தர இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- நஞ்சப்பா நகர் நூலகத்தின் பின்புறம் உள்ள தெருவுக்கு சிமெண்ட் சாலை மற்றும் கழிவுநீர் சாக்கடை அமைத்துக் கொடுக்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

227. **7ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு. எஸ். செல்வன் அவர்கள் முன்மொழிய 8ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு. கு. கிருஷ்ணராசு அவர்கள் வழிமொழிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

## 43. 27-வது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி. இராதாமணிபாரதி அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானம்.

- வாசுகி வீதி-4க்கு செல்லும் கான்கிரீட் சாக்கடை பாலத்தை உயரப்படுத்தி கட்டித்தருவதோடு அடியில் செல்லும் குழாய்களை மேற்புறம் பாலத்திற்கு மேல் தூக்கி போடலாம் என இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- வாசுகி வீதி-3க்கும் அகில்மேடு மெயின் வீதிக்கு செல்லும் பெரிய சாக்கடை தரைப்பாலத்தை உயரப்படுத்தி கட்டலாம் என இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- காமராஜ் வீதி பெரிய சாக்கடைப் பாலம் பழுதடைந்துள்ளது. அடிப்பகுதியில் செல்லும் அனைத்து குழாய்களையும் பாலத்திற்கு மேற்புறம் அமைத்து தருவதோடு புதிய கான்கிரீட் பாலம் அமைக்கலாம் என மாமன்றம் தீர்மானிக்கிறது.
- காமராஜ் வீதியில் பெரிய சாக்கடை நீர் வீடுகளுக்குள் புகா வண்ணம் பக்கவாட்டு கிளை சாக்கடையை உயரப்படுத்தி கட்டித்தர இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- தில்லை நகரில் ஐ.ஓ.பி பேங்க் எதில் உள்ள பகுதியில் கே.கே.பி இல்லத்திற்கும் பாட்டப்பன் வீட்டிற்கும் இடையில் புதிய கான்கிரீட் சாக்கடை பாலம் அமைக்கலாம் என இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- தில்லை நகரில் இடித்து விழுந்துள்ள சாக்கடை பக்கவாட்டு சுவரினை கட்டித்தர இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- ஈஸ்வரன் கோயில் வீதியிலிருந்து காமராஜ் வீதிக்குச் செல்லும் இடிந்த சாக்கடை பக்கவாட்டுச் சுவரினை புதுப்பித்து கட்டித்தர இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- என்.எம்.எஸ் காம்பவுண்டு பகுதியில் உள்ள குழல் விளக்குகளை அப்புறப்படுத்திவிட்டு சி.எப்.எல் பல்புகளாக மாற்றித்தர இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- கொத்துக்கார நல்லா வீதியில் உள்ள கான்கிரீட் குறுக்கு சந்தில் சி.எப்.எல் மின்விளக்கு கம்பம் அமைக்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- திருவேங்கிட சாமி வீதியில் சாக்கடையை அகலப்படுத்தியும், புதைநீர் வடிகால் திட்டம் அமைக்கலாம் என இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

228. **27ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி. இராதாமணிபாரதி அவர்கள் முன்மொழிய 49ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி. எஸ். பானுலட்சுமி அவர்கள் வழிமொழிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

## 44. 30-வது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி. கே. லட்சுமி அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானம்.

- சகன் வீதி, ராஜாஜிபுரம் இடைப்பட்ட பகுதியான மாகாளி அம்மன் கோயில் அருகில் குடிநீர் பைப் ஒன்று அமைக்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- சகன் வீதி, ஜானகியம்மாள் லே-அவுட் பகுதியில் இரண்டு வீதிக்கும் இடைப்பட்ட இடத்தில் குடிநீர் பைப் ஒன்று அமைக்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

- ராஜாஜிபுரம், காந்திபுரம் இணையும் வழியில் கீழ்மட்டமாக உள்ள கல்வெட்டு பாலத்தினை உயர்த்தி கட்டித்தர இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- ராஜாராம் தியேட்டர் அருகில் கல்வெட்டு பாலம் அமைக்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- வரகப்பா வீதியில் 2000 லிட்டர் சின்டெக்ஸ் டேங்க் பொருத்தி குழாய் அமைத்து தண்ணீர் விநியோகம் செய்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- ராஜாஜிபுரத்தில் உள்ள பழுதடைந்த சாக்கடைகளை சீர் செய்திடவும் புதிய சாக்கடைகளை அமைத்திடவும் இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

**229. 30ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி. கே. லட்சுமி அவர்கள் முன்மொழிய 10ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு. வி.சி. நடராஜன் அவர்கள் வழிமொழிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

**45.** ஈரோடு மாநகராட்சி திருநகர் காலனி வார்டு-ஏ, பிளாக் எண்.1 டி.எஸ். 95 பகுதி பம்பிங் ஸ்டேசன் ரோடில் திரு. எஸ். ஆறுமுகம் மற்றும் 7 நபர்கள் கட்டிடம் கட்டி வருவதை ஆட்சேபித்து திரு. எஸ். விஜயகுமார் என்பவர் சென்னை உயர்நீதி மன்றத்தில் டபிள்.யூ.ப்பி 700/11ல் வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கில் மாநகராட்சி ஆணையர் அவர்களை 2ம் பிரதிவாதியாக சேர்த்துள்ளார். மேற்படி வழக்கினை மாநகராட்சி வழக்கறிஞர் திரு.எம். ராஜாமதிவாணன் அவர்கள் ஏற்று நடத்தியுள்ளார். மேற்படி வழக்கிற்கான செலவுத் தொகையினை ஏற்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

மேற்படி வழக்கிற்கான செலவுத் தொகையினை மாமன்றம் அனுமதிக்கலாம்.

**இ3/4997/12**

**230. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**46.** மாவட்ட ஆட்சித்தலைவர்/தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, ஈரோடு அவர்களின் நடவடிக்கைகள் கடிதம் ந.க.எண்.664/2012/அ6 நாள் 21.08.2012ன்படி பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் வளர்ச்சித்திட்டம் 2012-13-ன் கீழ் திரு ஆ.கணேசமூர்த்தி, ஈரோடு மக்களவை உறுப்பினர் அவர்கள் ஈரோடு மாவட்டத்தில் பரிந்துரை செய்த பணிகளில் ஈரோடு மாநகராட்சி மண்டலம்-1 சூரியம்பாளையம் கூட்டு குடிநீர் திட்டத்தில் ஆற்றுநீர் பம்புசெட் (Raw water pumppset) 40HP- 2 எண்ணிக்கைகள் மற்றும் அதனை சார்ந்த உபகரணங்களை பொருத்தும் பணியினை ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள 21.09.2012 தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரி பெறப்பட்ட விபரம் பின்வருமாறு.

| | | | |
|---|---|---|---|
| 1. | M/s. Hydro Ele. Systems, Chennai | Rs.2310000/- | மதிப்பீட்டு விலை விகித தொகையை விட(Contract value) 3.61% குறைவு. |
| 2. | M/s. Ever bright Eng. Company, Chennai | Rs.2498800/- | மதிப்பீட்டு விலை விகித தொகையை விட (Contract value 4.27% அதிகம். |
| 3. | M/s. Dee-Tech projects Pvt Ltd., Chennai | Rs.2800600/- | மதிப்பீட்டு விலை விகித தொகையை விட(Contract value) 16.86% அதிகம். |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண்.1ல் குறிப்பிட்டப்பட்டுள்ள M/s.Hydro Electrical systems, Chennai நிறுவனம் ஒப்பந்தப்புள்ளி டேவணித் தொகை மற்றும் ஒப்பந்தப்புள்ளி படிவத்திற்கான விலையினை வங்கி வரைவோலையாக வழங்கி ரூ.2310000/- மொத்த தொகைக்கு இணையதளம் மூலமாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியிருந்தனர். வ.எண்.2ல் குறிப்பிடப்பட்டுள்ள M/s.Ever Bright Engineering company, Chennai நிறுவனம் ஒப்பந்தப்புள்ளி டேவணித் தொகை மற்றும் ஒப்பந்தப்புள்ளி படிவத்திற்கான விலையினை வங்கி வரைவோலையாக வழங்கி ரூ.2498800/- மொத்த தொகைக்கு இணையதளம் மூலமாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியும், மூடி முத்திரையிடப்பட்ட உறையில் மேற்கண்ட மொத்த விலை விகிதத்தில் 16% தள்ளுபடி வழங்குவதற்கான கடிதத்தை வழங்கியிருந்தனர். எனவே தள்ளுபடிக்கு பிறகு இந்நிறுவனத்தின் மொத்த ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.2098992/- ஆகும். வ.எண்.3-ல் குறிப்பிடப்பட்டுள்ள M/s.Dee Tech Projects Pvt Ltd.,, Chennai நிறுவனம் ஒப்பந்தப்புள்ளி டேவணித் தொகை மற்றும் ஒப்பந்தப்புள்ளி படிவதற்கான விலை

ஆகியவற்றை ஒப்பந்தப்புள்ளியுடன் வழங்கவில்லை. எனவே இந்நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க இயலாது.

எனவே வ.எண்.1ல் குறிப்பிடப்பட்டுள்ள M/s.Hydro Electrical Systems, Chennai நிறுவனத்திடம் இணையதளம் மூலமாக வழங்கியுள்ள ஒப்பந்தப்புள்ளி மொத்த தொகையை M/s. Ever bright Engineering company, Chennai நிறுவனம் தள்ளுபடிக்கு பிறகு வழங்கியுள்ள ரூ.2098992/- மொத்த தொகையினை விட குறைத்து வழங்க இயலுமா என இவ்வலுவலக 05.10.2012 மற்றும் 08.10.2012 தேதியிட்ட கடிதங்களின் வாயிலாக கேட்கப்பட்டது. அதனை தொடர்ந்து M/s.Hydro Electrical Systems, Chennai நிறுவனம் தனது 09.10.2012 கடிதத்தில் ஒப்பந்தப்புள்ளி மொத்த தொகையை ரூ.2090000/-க்கு குறைத்து வழங்க சம்மதம் தெரிவித்து உள்ளது. எனவே ஒப்பந்தப்புள்ளி தொகையை குறைத்து வழங்கியபின் ஒப்பந்தப்புள்ளி விபரம் பின்வருமாறு.

1. M/s. Hydro Ele. Systems, Chennai = Rs.2090000/-
   மதிப்பீட்டு விலை விகித தொகையை விட (Contract value) 12.79%(-) குறைவு
2. M/s. Ever bright Eng. Company, Chennai= Rs.2098992/-
   மதிப்பீட்டு விலை விகித தொகையை விட (Contract value) 12.41% (-)குறைவு

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த விலை விகிதம் வழங்கியுள்ள M/s.Hydro Electrical systems, Chennai நிறுவனத்தின் ஒப்புந்தப்புள்ளியை ஏற்க மாமன்றத்தின் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யும் குழுவினரால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

மாமன்றம் அனுமதி வழங்கலாம்

**இ2/3734/12**

**231. அனுமதி வழங்கப்பட்டது.**

**இடம்- ஈரோடு** **மேயர்,**

**நாள்- 30.10.2012** **ஈரோடு மாநகராட்சி**